கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
12-10-1975
60 காசு



கோகுலம்

மலர் 4 ※ இதழ் 14

அக்டோபர் 12, 1975

ராட்சஸ, புரட்டாசி 26

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விகிதம்
இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

இதர வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50

ஆகாரமும் அழகும்!

ஒருவருடைய அழகு அவர்களுடைய ஆகாரத்திலேயே அடங்கியுள்ளது என்றால் அது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை அதுதான். அழகு அதிகமாக 'எதைச் சாப்பிடுவது, எதை அருந்துவது?' — கேள்வி எளிது. ஆனால் பதில் பெரியது. பானம் என்று வரும்போது காப்பியும் டீயும் மட்டுமே உங்களுக்கு நினைவு வரும். வேறு நல்ல பானங்களும் உண்டே. கோகோ, தீமை விளைவிக்காதது. சத்துள்ளதும் கூட. ஆனால் கிடைக்காதே! விலையும் கூடுதலாயிற்றே. ஆகவே, குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான தண்ணீர் மட்டுமே குடித்தாலே போதும். இலகுவானது, எப்போதும் கிடைப்பது. ஜீரண உறுப்புக்கள் வேலை செய்ய உதவுவதோடு குடலைச் சுத்தப்படுத்தவும் செய்கிறது தண்ணீர். இதனால் மேனி நல்ல நிறம் பெறுகிறது. பால் அநேகமாக எல்லோருக்கும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு பொருள். சருமத்தை மிருதுவாக்கவும் வெளுப்பாக்கவும் செய்யும் குணம் பாலுக்கு உண்டு. சாதம், ரொட்டி, கேக் முதலிய புரதச் சத்து மிகுந்த ஆகாரங்களையே நாம் அதிகமாக உண்கிறோம். இவற்றோடு ஒவ்வோர் ஆகாரத்துடனும் பழங்களைப் பச்சையாகவோ, பக்குவப்படுத்தியோ சேர்த்துக் கொள்ள வேண்டும். இயற்கை அன்னை அளிக்கும் அழகூட்டும் சாதனங்கள் இவை. வாழ்வை வளமாக்கும் அமுதம். பழங்களை அதிகம் உண்பவர்களுக்கு டாக்டர் பில் குறைவு. செயற்கை அழகுச் சாதனங்களுக்குச் செலவழிக்கும் பணமும் மிச்சம். ஆரஞ்சு, மா, கொய்யா, ஆப்பிள், திராட்சை, வாழை — எல்லாப் பழங்களுமே ரத்தத்தைச் சுத்தம் செய்கின்றன, நரம்புகளை முறுக்கேற்றுகின்றன. ஜீரண உறுப்புக்களைச் செம்மையாக்குகின்றன. இதனால் உங்கள் கன்னங்களில் பளபளப்பும் முகத்தில் மினுமினுப்பும் கூடுகிறது. நம் உடலுக்குத் தேவையான சர்க்கரை முழுதும் பழங்களிலேயே இருக்கிறது. ஆகவே பழுத்த பழங்களை உண்பவர்கள் சர்க்கரை டப்பாவைத் தொடவே வேண்டாம்! அதே மாதிரி எல்லா வகையான பச்சைக் கறிகாய்களையும் நிறையச் சாப்பிட வேண்டும். கிழங்கு வகைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். கீரைகளில் பசலைக் கீரை மேனி பளபளக்க உதவுகிறது. பசலைக் கீரையில் ஏராளமான இரும்புச் சத்து இருக்கிறது. இரும்புச் சத்து மாத்திரைகளையும் டானிக்குகளையும் விடப் பசலைக் கீரை; மலிவானது, சுலபமாகக் கிடைப்பது. மரக்கறி உணவினால்தான் மேனி அழகு கூடும். கூடுமான வரை மாமிச உணவை ஒதுக்குவது மேனியழகை அதிகமாக்கிக் கொள்வதற்கான ஒரு வழியாகும். மொத்தத்தில் அந்தப் பாட்டி சொன்னபடி உண்டி சிறுத்தல் பெண்டிற்கு அழகுதானே!


— கே. சாந்தா.




ஓடியாடி விளையாடும்போதும் வேலை செய்யும்போதும் இலகுவாக இருக்க ஓர் உடை இருந்தால் நல்லதில்லையா? 4ம் பக்கம் பாருங்களேன்!

அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்



14. தீமை செய்த மாமி

வத்சலா என்ற பெண்மணி உயர்ந்த உத்தமப் பண்புடையவள். இவளுடைய கணவன் மங்குசாமி ஓர் அப்பாவிச் சாது. மங்குசாமியின் தாய் கொடிய தாடகை போன்றவள். மருமகளாகிய வத்சலாவை அப்பளப் பூவைப் போல் வறுத்துக் கொட்டினாள் மாமி.

நடந்தாலும் பிழை: நின்றாலும் பிழை; இருந்தாலும் பிழை. என்று சதா வசவு புராணம் பாடுவாள். வத்சலா குடும்ப வேலைகளைப் பம்பரமாகச் சுழன்று செய்வாள். அப்படிச் செய்தும் மாமியார் அவளை ஏசுவாள்.

சமையல் காய்கறிகளை எண்ணித் தந்து, சமையல் முடிந்தவுடன் எண்ணிப் பார்ப்பாள். உருளைக் கிழங்கு, வாழைக்காய், பூண்டு என்ற இவைகளைக் கணக்கு வைத்து, அவற்றை எண்ணிக் கொண்டு, தானும் தன் மகனும் மட்டும் வயிறு புடைக்கத் தின்று, மருமகளுக்கு வெறும் சோறும் நீரும் உப்பும் இட்டு, ''இதைத்தான் நீ சாப்பிட வேண்டும். புளி மிளகாய் உண்டால் உடம்பு மதமதத்துக் கொள்ளும்'' என்று கூறுவாள். பாவம் வத்சலா, தன் விதியை நொந்து மாமிக்கு அடங்கி நல்லுணவு இன்றி நலிந்து மெலிந்து விட்டாள்.


எண்ணெயிட்டுக் குளிக்காமையினால் அவளுடைய கண் எரிந்தது. புலியிடத்து அகப்பட்ட மான்போல் இளம் பெண் வேதனைப்பட்டாள்.

மங்குசாமி ஒரு நாள் தன் மனைவியைப் பார்த்து, ''பெண்ணே! நீ தாய் வீட்டுக்குப் போய்ச் சில நாள் தங்கி விட்டு வரலாமே. உனக்குச் சுகம் கிடைக்குமே?'' என்றான்.

வத்சலா, ''என் அன்புக் கணவரே! எல்லாம் விதியின் பயன். முன் செய்த நன்மை தீமையின்படிதானே நடக்கும். முற் பிறப்பில் நான் மருமகளை வாட்டி வதைத்திருப்பேன்; அதன் பயனை இப்போது அனுபவிக்கின்றேன். வினையை நோவதன்றி மற்றவரை நோகக் கூடாது'' என்றாள்.

ஒரு நாள் எட்டுப் பிஞ்சுக் கத்திரிக் காய்களைக் கொண்டு வந்து மங்குசாமி தன் தாயிடம் தந்து, எண்ணெய்க் கத்திரிக்காய்க் குழம்பு வைக்கச் சொன்னான். அவள் அதை வத்சலாவிடம் தந்து குழம்பு வைக்கச் சொன்னாள்.

வத்சலா கத்திரிப் பிஞ்சுகளில் நாலு கூறிட்டு, அவற்றுள் வறுத்த எள்ளுப் பொடியைத் திணித்து, நிறைய



எண்ணெயிட்டு வெங்காயம் இட்டு, அது வதங்கியபின், அந்த எண்ணெயில் இந்த எட்டுக் கத்திரிப் பிஞ்சுகளையிட்டு, எண்ணெயிலேயே அவைகள் வெண்ணெய் போல் வெந்தபின், மிளகாய் அரைத்து, புளியும் உப்பும் இட்டு தேன் போல் கூட்டி அதில் இட்டு, சிறு தீயிட்டு நன்றாக வற்றியபின் இறக்கி வைத்துச் சிறிது எள்ளுத் தூள் இட்டு மூடி வைத்தாள். எள்ளின் வாசனை கமகம என்று மணம் செய்தது. வத்சலாவுக்கு வாயில் நீர் ஊறியது. ஒரு கத்திரிக் காயில் ஒரு கீற்றைப் பிட்டு வாயில் இட்டாள். மிக்க சுவையாயிருந்தது. மாமிக்கு அஞ்சி மற்ற மூன்று கீற்றைக் குழம்பில் விட்டு விட்டாள்.

பகல் ஒரு மணி. கிழவி வந்து கூடத்தில் அமர்ந்தாள். எல்லாவற்றையும் கிழவியின் முன் வத்சலா வைத்தாள். கிழவி குழம்பில் உள்ள எல்லாக் கத்திரிப் பிஞ்சுகளையும் ஒவ்வொன்றாக எடுத்து உற்றுப் பார்த்தாள். ஒரு கத்திரிக் காயில் ஒரு கீற்று இல்லை.

அவள் ஆலகாலம் போல் சீறினாள். ம்..... என்று பெருமூச்சுவிட்டுக் கர்ச்சித்தாள். ''அடியே! எங்கே ஒரு கீற்று ?'' என்று கேட்டாள். கரைந்து போய்விட்டது என்று கூறிவிடலாம். அவள் பொய் சொல்லாத புனிதவதி. ''மாமீ! நான்தான் சுவை பார்க்கும் பொருட்டுத் தின்றுவிட்டேன்'' என்றாள்.

கிழவி கொடிய நாகம் போல் சீறினாள். ''அடியே! என் உத்தரவு இன்றிக் கத்திரிக்காயின் கீற்றை உண்டனையா ? உனக்கு அத்தனை அகங்காரமா ? உன்னை இனி ஒரு கண நேரம்கூட வாழவிட மாட்டேன். உனக்கு இனி மரண தண்டனைதான்.'' என்று இடி இடித்தது போல் கடிந்துரைத்து, ஒரு சாக்குப் பையில் அவளைப் போட்டுக் கட்டி, ''மகனே! இவளைக் கொண்டு போய் மயானத்தில் கொளுத்து'' என்று கட்டளையிட்டாள்.

தாய் சொல்லைத் தட்டாத அவன் மனைவியைக் கட்டிய சாக்கை மயானத்தில் வைத்துவிட்டுக் கட்டை முட்டை தேடச் சென்றான்.

அங்கு ஒரு கோனார் போனார். அவர் மூட்டையை அவிழ்த்தார். ''நீ யார் அம்மா?'' என்று கேட்டார்.

''அண்ணா! நான் ஓர் அபாக்கியவதி. ஒரு கத்திரிக்காய்க் கீற்று தின்றுவிட்டேன். என்னைத் தகனம் செய்யுமாறு என் மாமி கட்டளை இட்டாள்.''

கோனார், ''அம்மா! நீ காட்டில் ஓடிப் பிழைத்துக் கொள்'' என்று அவளை அனுப்பிவிட்டு ஒரு நோய்வாய்ப் பட்ட கிழ ஆட்டைச் சாக்கில் கட்டி வைத்துச் சென்றார்.

மங்குசாமி அதை மனைவி என்று நம்பி கட்டையடுக்கி அதன் மீது வைத்துத் தீ மூட்டி எரித்துவிட்டு நீராடி வீட்டுக்கு வந்தான். ''உன்னைப் பிடித்த சனியன் தொலைந்தது. படுத்துச் சுகமாகத் தூங்கு'' என்றாள் தாயார்.

கானகத்துக்குள் சென்ற வத்சலா அங்கிருந்த ஒரு காளி கோயிலுக்குள் சென்று தேவியைத் தொழுதாள்; அழுதாள். உள்ளம் உருகிஉயிரை வெறுத்துத் தேவியின் திருவடியில் தலையை மோதினாள். காளி தேவி அவளுக்குக் காட்சி தந்தாள். ஒரு திறவு கோலைத் தந்து, ''குழந்தாய்! வருந்தாதே. இந்த அறையில் நீ நினைத்த எல்லாம் வரும். என்னைப் பூசை செய்து கொண்டு சுகமே இரு'' என்றாள்.

அந்த அறையில்பால், பழம், தேன், பொங்கல், இளநீர் முதலிய நினைத்த



தெல்லாம் வரும்; தேவியைப் பக்தியுடன் வழிபட்டு வந்தாள் வத்சலா.

மூன்று ஆண்டுகள் கழிந்தன. வத்சலா பொன் மேனி பெற்று தேஜோமயமாக விளங்கினுள். ஒரு நாள் உயர்ந்த பட்டாடையைத் தேவிக்குச் சாத்தி, மறு நாள் அதைத்தான் உடுத்திக் கொண்டாள். அப்போது அவள் இந்திராணி போல் காட்சி அளித்தாள்.

"இதுபோன்ற ஒரு புடவையை மாமிக்குத் தந்தால் மாமி மகிழ்வாளே" என்று எண்ணினுள்.

இதை அறிந்த காளி தேவி, "வத்சலா! இன்னும் உனக்குக் குடும்ப பாசம் நீங்கவில்லை. தேவையான ஆடை அணிகலன்களை எடுத்துக் கொண்டு போய்ச் சிலகாலம் கணவனுடன் வாழ்ந்து விட்டுப் பிறகு என்னிடம் வருக" என்று பணித்தாள்.

வத்சலா தேவியைப் பிரிய மனம் இன்றி, அவள் கட்டளையை மீறவும் அஞ்சி, புடவைகள், அணிகலன்கள், பட்சணங்கள் இவைகளை மூட்டையாகக் கட்டிச் சுமந்து தன் வீட்டை அடைந்தாள்.

பதினெட்டாம் படிக் கருப்பு போல் அமர்ந்திருந்த மாமியைக் கும்பிட்டாள். அவளை அடையாளம் தெரியாமல், "நீ யாரம்மா? ரதியா? ரம்பையா? லட்சுமியா?" என்று கேட்டாள். "மாமீ! என்னைத் தெரியவில்லையா? நான்தான் கத்திரிக்காய் மூளி. உங்கள் பிள்ளை என்னைக் கொளுத்திவிட்டார். நான் வானுலகம் போய் மாமாவைச் சந்தித்து அவருடைய ஆதரவில் இருந்தேன். அவர் உங்களை நினைந்து நினைந்து உருகுகின்ருர். இவையெல்லாம் உங்களுக்குத் தந்தார்" என்று கூறி அவைகளை அவிழ்த்துக் காட்டினுள்.

கிழவி கண்ணீர் வடித்தாள். "நான் செய்த துன்பத்தைத் தாங்கமாட்டாமல்தான் அவர் சுருக்கிட்டுக்கொண்டார். அப்படி இருந்தும் என் மீது இவ்வளவு பிரியம் வைத்திருக்கின்ருரா?.... எனக்கு என்ன சொன்னுர்?"


"மாமீ, உங்களைப் பார்க்க வேண்டும் என்ருர்."

"அப்படியா! என் கணவனிடம் நானே போய் வேண்டியதை வாங்கி வருவேன். மகனே! என்னைக் கொண்டு போய்க் கொளுத்து. உங்கப்பாவிடம் போய் நிரம்ப வாங்கி வருவேன்" என்ருள். மங்குசாமி தாயைக் சாக்கி விட்டு மயானத்தில் தீயிட்டான். வீட்டுக்கு வந்தான். "பெண்ணே! என் தாய் தந்தையிடம் சேர்ந்திருப்பாளா? எப்போது திரும்புவாள்?" என்று கேட்டான்.


"பிராணநாதா! உங்கப்பா உங்க அம்மாவை அனுப்புவாரோ? அனுப்ப மாட்டாரோ? எனக்கு எப்படித் தெரியும்? அவர்கள் அங்கேயே இருக்கட்டும். நாம் இங்கே இருப்போம்" என்ருள். வத்சலா சுகமாக வாழ்ந்தாள். தீமை செய்த மாமி தீவாய் நரகில் ஆழ்ந்தாள்.

சௌகரியமான உடை

தகிக்கும் கோடை. உடம்பில் துணி படமுடியவில்லை. தோட்ட வேலை செய்ய ஆசையாக இருக்கிறது. அதற்கு வாகாக ஓர் உடை. ஓடியாடி விளையாடுகிறீர்கள், பாவாடையும் கவுனும் இடைஞ்சலாக இருக்கிறதே! இப்படி எல்லாவற்றுக்கும் இலகுவாக ஓர் உடையை நீங்களே தயாரித்துக் கொள்ளலாம். ரொம்பச் சுலபம். பார்க்க எளிமையாகவும் அழகாகவும் இருக்கும். இதற்கு வேண்டியதெல்லாம் சற்றே நீளமான ஒரு பாத் டவல். (டர்க்கி டவல் — தேங்காய்ப்பூத் துண்டுகளும் பயன்படும்.) இதன் நடுவில் டயமண்ட் உருவில் உங்கள் தலை நுழையும் அளவில் வெட்டிவிடுங்கள். டயமன்டின் முனைகளில் கொஞ்சம் வெட்டி உட்புறமாக மடித்து 'ஹெம்' செய்து (பூத் தையல்) ஸ்தத்துவிடுங்கள். டவலின் இரு பக்கத்திலும் நாடாவை (ஹெம் செய்த முனையிலிருந்து எட்டங்குலம் தள்ளி) இணைத்து (தையல் போட்டு) விடுங்கள். சௌகரியமான நவீன ஆடை ரெடி! டையமண்ட் துவாரத்தில் தலையை நுழைத்துக் கொண்டால் டவல் உடலின் இரு பக்கங்களிலும் தோள் வழியாக வழிந்து விடும். நாடாவை இழுத்து இரு பக்கத்திலும் கட்டிக் கொண்டு விடவேண்டும். ஓடியாடி வேலை செய்ய ரொம்ப வசதியாக, சௌகரியமாக இருக்கும் இந்த உடை.



சிரிக்கச் சிரிக்க...



ஆசிரியர்: அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் என்ன வித்தியாசம்?

மாணவன்: அந்தக் காலத்திலே 'சாமி'ன்னு பயப்படுவாங்க, இந்தக் காலத்திலே 'மிசா'ன்னு பயப்படுறாங்க.

— ஆ.கு.க. ஆண்டாள்



நீதிபதி: அந்த வீட்டில் இருந்தவர்களைக் கட்டிப் போட்டுவிட்டு நகைகளையெல்லாம் திருடிக்கொண்டு போனாயாமே?

திருடன்: அந்த வீட்டுக்காரர்கள்தான் 'எங்களை விட்டுடுங்க நகைகளை வேணும்னு எடுத்துக்கிட்டுப்போ'ன்னு கெஞ்சினாங்க.

—போத்தனூர் சாரதி



இன்ஸ்பெக்டர்: ஏய் 501, 208ஐயும் 302ஐயும் கூட்டிக்கிட்டு வா.

போலீஸ்காரர் (மறதியாக): 208ஐயும் 302ஐயும் கூட்டிட்டேனுங்க. 510 வருதுங்க.

— க. குமரேசன்



ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நாஸிருத்தீன் சந்தைக்கு வந்து ஓர் அருமையான கழுதையை விற்றார். விலையோ கொள்ளை மலிவு. ஒரு நாள் ஒரு கழுதை வியாபாரி முல்லா நாஸிருத்தீனை அணுகினான். "நாஸிருத்தீன் உம்மால் இவ்வளவு குறைந்த விலையில் எவ்வாறு விற்க முடிகிறது? என்னுடைய அடிமைகள் கூலியின்றிக் கழுதைகளைப் பார்த்துக் கொள்கிறார்கள். தீனிகூடக் குடியானவர்களிடமிருந்து திருடி வருகிறார்கள். இவ்வளவு வசதி இருந்தும் உம் விலை எனக்குக் கட்டவில்லையே?" என்று கேட்டான். "மிகவும் எளிது" என்றார் முல்லா. "நீ தீனியும் கூலியும்தான் திருடுகிறாய். நானோ கழுதையையே திருடி விற்று வருகிறேன்!"


— ஆர். சந்திரிகா



பட்டு: உன் பேர் கெட்டுப் போனதுக்கு உங்க அப்பாதான் காரணம் என்கிறாயே எப்படி?

கிட்டு: என் அப்பாவின் பெயர் கே. துரைசாமி. அதனாலே எல்லோரும் என்னைக் கேடியோட பையன் என்கிறார்கள்!

— ஜி. ரேணுகா சாந்தி



'கூட்டத்தில் பேசுபவர்: 'விழா'த் தலைவர் அவர்களே!

கூட்டத்தில் ஒருவர்: தாங்கள் சொல்வது தவறு. இந்தத் தலைவர் நேற்று என் வீட்டின்முன் வழுக்கி விழுந்ததை என் கண்ணால் பார்த்தேன்.

— ஜி. ரேணுகா சாந்தி




அண்ணன்: ஒன்பது கால் உள்ள மனிதர்களை நீ பார்த்தது உண்டா?

தங்கை: இல்லையே! எங்கேயிருக்கிறார்கள் அவர்கள்.

அண்ணன்: எல்லா மனிதர்களுக்குமே, ஒன்பது, கால்கள் தானே! ஒன்பது கால் இரண்டே கால் இல்லையா?

— ஜி. ரேணுகா சாந்தி





டெலிவிஷன் காமிரா



படத்தைக் கூறுபோடல்
(ஸ்கானிங்)


'தமிழ்நாட்டுக்கு டெலிவிஷன் வந்துவிட்டது!' இதுதான் இப்போது எங்கும் பேசப்படும் செய்தி. டெலிவிஷன் என்பது என்ன? ரேடியோவில் பாட்டு, பேச்சு, நடிப்பு இவைகளை யாரோ எங்கிருந்தோ செய்ய நாம் நம் வீட்டில் இருந்தபடி ரேடியோப் பெட்டியின் ஒரு குமிழைத் திருகிவிட்டுக் கேட்கிறோம். ஒலி அலைகளை மின் அலைகளாக மாற்றி விண்வழியே அனுப்பி அதை மறுபடியும் ஒலி அலைகளாக மாற்றிக் கொடுக்கும் சாதனம் ரேடியோ. அதே மாதிரி பாடுபவர், பேசுபவர், நடிப்பவர்களின் உருவத்தையே நம் வீட்டில் உட்கார்ந்தபடி ஒரு பெட்டியில் உள்ள திரையில் திரைப்படம் போல் காட்டும் சாதனம் டெலிவிஷன். ஒலியோடு ஒளியையும் இதேபோல் மின் அலைகளாக்கி விண்வெளியே செலுத்தி அதை மறுபடியும் ஒளி, ஒலி அலைகளாகக் கிரகிக்கச் செய்யக்கூடியதே இந்த 'டிவி' சாதனம். ரேடியோவைப் போல அத்தனை இலகுவான விஷயமல்ல 'டிவி'. மேல் நாடுகளில் வர்ணப் படங்களை ஒளிபரப்பும் 'டிவி', கையிலே தூக்கிச் செல்லும் (டிரான்ஸிஸ்டர் போல) 'டிவி.' என்றெல்லாம் வெகுவாக முன்னேறியிருக்கிறது. அந்த அளவுக்கு நாம் வளர இன்னும் எத்தனையோ ஆண்டுகள் ஆகலாம். எல்லோருமே நம் நாட்டில் 'டிவி' வாங்க முடியுமா? முடியாது. 'டிவி' செட் ரொம்பவும் விலை அதிகம். நாலாயிரம் ரூபாய் ஆகிறது ஒரு சாதாரண 'டிவி' செட். அதைத் தவிர இதைப் பராமரிக்கவும் ஏகச் செலவு. ஆகவே டெலிவிஷன் ஒரு ஆடம்பரப் -பொருள் லக்ஸரி!

இது போகட்டும். டெலிவிஷன் என்ற இப்புதுமையைப் பற்றிச் சில அடிப்படையான விஷயங்களை அறிந்து கொள்ளலாமே. அதற்குச் செலவு ஏதுமில்லையே! 'டிவி' என்று அழைக்கப்படும் டெலிவிஷனைக் கண்டுபிடித்தது யார்?

குறிப்பிட்ட வடிவங்களை ஒரே சமயத்தில் அனுப்பியும்; திரும்பப் பெறவும் கூடிய ஓர் அமைப்பைப் பொதுமக்களின் பார்வைக்கு அளித்தது ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜான் லாகி பேர்டு (John Logie Baird) என்பவர் 1926ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ந் தேதியன்று ராயல் கழகத்தின் அங்கத்தினர்களில் நாற்பது பேர்களின் முன்னால் ஒரு பொம்மையையும் மனித முகத்தையும் ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்கு டிரான்ஸ்மிட் செய்து 'டிவி' திரையில் காட்டினார். அந்த முதல் 'டிவி' படம் ஒரு தபால் தலையின் அளவுதான் இருந்தது.

அமெரிக்காவில் ஸி. எஃப். ஜென்கின்ஸ் என்பவர் டெலிவிஷன் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருந்தார். 1927 ஏப்ரலில் அமெரிக்க விஞ்ஞானிகள் மனித உருவத்தை நியூயார்க்கிலிருந்து வாஷிங்டனுக்கு அனுப்பிக் காணும்படிச் செய்தார்கள். இவர்களுடையதும் பேர்டின் முறையைப் போலவேதான் இருந்தது.





டெலிவிஷன் செட்டில் உள்ள காதோடு ரே குழாயில்.

1. காதோடு அலைகள். 2. சென் விடில் ஸ்கிரீன் 3. காதோடு ரேயை உமிழும் பாகம்.

முன் பக்கத்தில் உள்ள டெலிவிஷன் காமிராவினுள் இருக்கும் டியூபின் பாகங்கள்:

1. காமிரா லென்ஸ். 2. படம் பிடிக்கப்படும் காட்சி. 3. காதோடு ரேயை வெளிவிடும் பாகம். 4. காட்சிகளைக் கூறுபோடும் காதோடு ஒளி. 5. ஒளிக் கதிர்களை டிரான்ஸ்மிட் செய்யக் கொண்டு போகும் மின் இணைப்பு. 6. சென் விடில் ஸ்கிரீன் (மொஸாய்க் திரை).

டெலிவிஷன் செட்டினுள்:

1. ஒலிபெருக்கி. 2. மொஸாய்க் திரை. 3. காதோடு ரே குழாய். 4. ஏரியலுக்கு இணைப்பு. 5. மின் சாரத் தொடர்பு.

டெலிவிஷன் செட்

டி.வி. ஏரியல்

மேலும் ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. முறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. பேர்டு இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு டெலிவிஷன் படங்களை அனுப்பிப் பெறச் செய்தார். ஆரம்ப காலத்தில் டெலிவிஷன் செட்டுகள் அங்கும் மிகவும் விலையுயர்ந்த பொருளாகத் தான் இருந்தது. ஆரம்ப காலத்தில் இந்த செட்டுக்களுக்கு டெலிவிஸார் *(Televisors)* என்று பெயர். ஆரம்ப டெலிவிஷன் செட்டுக்கள் விநோத அமைப்புடன் இருந்தன. இதன் முக்கியமான பாகம் ஓர் உலோகத் தகடு. இந்தத் தகட்டில் சதுர வடிவமான துளைகள் இடப்பட்டிருக்கும். பல வருஷங்களுக்கு முன்னால் ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானியான நிப்கோவ் *(Nipkow)* என்பவர் இந்த யோசனையைக் கூறி இருந்தார். இந்தத் தகட்டின் ஒரு பக்கத்தில் நியான் விளக்கு எரியும். தகடு வேகமாகச் சுழலும். அப்போது இதிலுள்ள துளைகளின் வழியாக மறுபக்கத்திலுள்ள கண்ணாடித் திரையில் ஒளி பாயும். இப்படிப் பாயும் ஒளி உருவமாக உருப்பெறும். வெகு தூரத்திலிருந்து அனுப்பப்படும் ஒளி அலைகளின் தன்மைப்படி (டிரான்ஸ்மிட்டர்) நியான் விளக்கு பிரகாசமாகவும் மங்கலாகவும் எரிவதினால் உருவத்தின் தோற்றம் உலோகத் தகட்டில் தெரிந்தது. இந்த முறையில் முன்னேற்றம் காண பேர்டு பத்து வருஷங்கள் ஆராய்ச்சி செய்தார்.

வேறு விஞ்ஞானிகள் மாற்று முறைகளில் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். மேலே குறிப்பிட்ட முறையிலிருந்து மாறுபட்ட டிரான்ஸ்மிட்டரோடு ஒளி அலைகளைக் கிரகிக்கும் ரிஸீவிங் செட்டிலே உலோகத் தகட்டுக்குப் பதில் 'காதோடு ரே' குழாய்களைப் *(Cathode Ray Tube)* பயன்படுத்தினார்கள். இன்றைய 'டிவி'கள் இந்த 'காதோட் ரே டியூப்' முறையில்தான் செயல்படுகின்றன. இது பல்வேறு நாட்டு விஞ்ஞானிகளின் கூட்டு ஆராய்ச்சியின் பலன் என்றாலும், இவர்களுக்கு ஊக்கமளிக்கும் வழி முறைகளை அமைத்துக் கொடுத்தவர் ஜான் லாகி பேர்டுதான்.

இன்றைய டெலிவிஷன் எப்படி இயங்குகிறது?

டெலிவிஷன் ஸ்டுடியோவுக்குப் போனீர்களானால் அங்கு கலைஞர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இங்கும் அங்கும் இயங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். மிகவும் சக்தி வாய்ந்த மின் விளக்குகள் விதானத்திலிருந்து தொங்கிக்கொண்டிருக்கும். சினிமாப் படம் எடுப்பதைப் போலக் காமிராக்காரர், டிராலியில் அமைத்த தமது காமிராவை இங்கும் அங்கும் நகர்த்தியவாறு சப்தமில்லாமல் படம் எடுத்துக் கொண்டிருப்பார். மின்பொறியாளர்கள் சிக்கல் நிறைந்த மின்சார அமைப்புக்களை இயக்கிக் கொண்டிருப்பார்கள். நிகழ்ச்சி ஒளி வெள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

டெலிவிஷன் காமிராவுக்குள், லென்ஸ் தன்மீது பாயும் ஒளியிலிருந்து ஓர் உருவத்தை உருவாக்கித் தனக்குப் பின்னு

லிருக்கும் விசேஷமான ஒரு திரையில் விழும்படி செய்கிறது. இந்தத் திரைக்கு மொசாய்க் (Mosaic) என்று பெயர். திரை என்பது காமிராவினுள் இருக்கும் ஒரு கண்ணாடிக் குழாய். இந்தக் கண்ணாடிக் குழாய் பெரிய பல்பு போலிருக்கும்: லட்சக் கணக்கான ஃபோட்டோ எலெக்ட்ரிக் செல்'களால் ஆக்கப்பட்டது இந்த பல்பு. வெளிச்சம் இந்த ஃபோட்டோ எலெக்ட்ரிக் செல்லின் மீது விழும்போது மின் அலைகள் உண்டாக்கப்படுகிறது. இந்த செல்லை மின்சாரக் கண் (Electric Eye) என்றும் கூறுவார்கள். கண் செய்யும் காரியத்தை இது செய்கிறதினால் இந்தப் பெயர். இந்தத் திரை மீது அதிக வெளிச்சம் விழுமானால் மின் அதிர்வுகளும் அதிகமாக இருக்கும். குறைவான வெளிச்சம் குறைவான மின் அலைகளை ஏற்படுத்தும். இந்த மாறுபட்ட மின் அதிர்வுகளை வெளியேற்றி விண்வெளியில் கொண்டு சென்று அனுப்பும் (டிரான்ஸ்மிட் செய்ய) செயலைத் திரையுடன் அமைக்கப்பட்ட மின் கம்பிகள் செய்கின்றன. திரையில் வெளிச்சம் விழுந்தால் மட்டும் மின் அதிர்வுகள் ஏற்பட்டு விடாது. இந்தப் பல்பின் கழுத்துப் பகுதியிலிருந்து காதோடு ஒளிக்கதிர்கள் இந்தத் திரையில் பாயவேண்டும். அப்போதுதான் ஒளி, மின் அலைகளாக மாற்றம் பெறும். காதோடு கதிர் வீச்சு என்பது என்ன? எதிர்மறை (Negative) மின்சாரத் துகளுக்கு எலெக்ட்ரான்ஸ் என்று பெயர். இந்த எலெக்ட்ரான்களே காதோடு கதிர் வீச்சாகும். இக்கதிர் காமிராவில் உள்ள திரை மீது நேர் கோடுகளாக இடமிருந்து வலமாகவும் ஒன்றன் கீழ் ஒன்றாகவும், அடுத்தடுத்துப் பாய்கிறது. இப்படி ஒருபடம் 405 கோடுகளால் கூறுபோடப்படுகிறது. இதற்கு ஸ்கானிங் (Scanning) என்று பெயர். ஒரு காட்சியை இப்படிக் கூறு போட 1/25 விநாடிகளே தேவைப் படுகிறது. இக்கதிர் மறுபடியும் திரையின் மேல்பகுதியிலிருந்து அடுத்த காட்சியைத் திரையில் கோடுகளால் கூறுபோடுகிறது. இப்படியே காட்சிகளை மாற்றி மாற்றி மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் காதோடு கதிர் வீச்சு கூறுபோட்டுக் கொண்டேயிருக்கிறது. இதனால் ஏற்படும் மாறுபட்ட மின் அதிர்வுகளை திரையோடு இணைக்கப்பட்ட மின் இணைப்புக் கம்பி வெளியே எடுத்துச் செல்கிறது. இந்த மின்சாரப் படத்தின் மின் அலைகளைப் பெரிதாக்கி ரேடியோ அலைகளாக விண்வெளியிலே டெலிவிஷன் டிரான்ஸ்மிட்டர் மூலமாக அனுப்புகிறார்கள்.

ரேடியோ அலைகளைக் கிரகித்து ரேடியோப் பெட்டி எப்படி ஒலிகளை உண்டாக்குகிறதோ, அதே மாதிரி டெலிவிஷன் படங்களைக் கிரகிக்கும் 'டிவி' செட்டினுள்ளும் காமிராவினுள் உள்ளது போன்ற காதோடு ரே ட்யூப் ஒன்று இருக்கிறது. இந்த டியூபின் ஒரு பக்கம் படங்களை உருவாக்கும் திரையாகப் பயன்படுகிறது.

டெலிவிஷன் செட் ரேடியோ அலைகளை வாங்கி அவற்றை மறுபடியும் காட்சிகளாக மாற்றுகிறது. ரேடியோப் பெட்டியில் மின்சாரம் ஒலியாக மாறுவது போல் 'டிவி' செட் மின் அலைகளை ஒளி அலைகளாக மாற்றுகிறது. இந்த ஒளி அலைகள் (காதோட் கதிர்கள்) 'டிவி' செட்டின் திரையில் தாக்கும்போது ஓர் ஒளிப் புள்ளி ஏற்படுகிறது. ரிஸீவிங் செட்டில் உள்ள காதோடு கதிர்கள் படம் எடுக்கும்போது எப்படிக் காட்சிகளைக் கூறு போட்டதோ அதே போலக் கூறுபோட்ட படங்களை இங்குள்ள திரையில் உமிழ்ந்து பதிய வைக்கிறது. மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாக. ஒளிப் புள்ளி மாறுபட்ட பிரகாசங்களில் காணும் திரையில் பிரயாணம் செய்யும்போது காட்சிகள் தோற்றுவிக்கப் படுகின்றன. இதைப் படிக்க இவ்வளவு நேரமாகிறதே தவிர ஒளிப் புள்ளியின் பிரயாணம் மிகமிக வேகமாக நடைபெறுகிறது. ஒரு முழுக் காட்சி தோன்ற 1/25 விநாடிகள்தான் ஆகின்றன. காட்சிகளின் ஒவ்வொரு பகுதியும் 1/24 விநாடிகள் திரையில் நிலைத்திருக்கின்றன. இந்தக் கணக்குகள் எதற்காக என்று குழம்புகிறீர்களா? நாம் ஒரு காட்சியைக் கண்டால் அதன் தோற்றம் நம் கண்களில் 1/24 விநாடிகள் நிலைத்து நிற்கின்றன. இந்தக் காலப் பிரமாணத்துக்குள் அடுத்த காட்சி அதன் மீது பதிகிறது. அதனால்தான் நம்மால் ஒரு காட்சியை முழுமையாகக் காண முடிகிறது. சினிமாக் காட்சிகளைச் சலனங்களோடு நாம் காண்பதன் ரகசியமே இதுதான். நம் கண்களை நம்மை ஏமாற்றுகின்றன என்பதை விஞ்ஞான பாடத்தில் படித்திருப்பீர்களே. இதே ஏமாற்று வேலையினால்தான் ஒளிப் புள்ளிகளை உருவங்களாக நம் கண்கள் டெலிவிஷனில் கண்டு களிக்கிறது.

டெலிவிஷன் செட்டை ஸ்விட்ச் ஆன் செய்துவிட்டுத் திரையை உற்றுப் பார்த்தீர்களானால் காட்சிகள் மிக மிக நெருக்கமான புள்ளிக் கோடுகளால் ஆக்கப்படுவதைக் காணலாம்.



ஒரு பொய் — ஒரே ஒரு பொய்!

ஒரு பொய்கூடச் சொல்ல மாட்டேன் என்பதற்காகப் படாத கஷ்டங்களையெல்லாம் பட்டான் ஓர் உத்தமன். மணி மகுடத்தைத் துறந்தான். மனைவியையும், மகனையும் வியாபாரப் பொருளைப் போல் சந்தையிலே விற்பனை செய்தான். ஏன், தன்னைத் தானே ஒரு சண்டாளனிடம் விற்றுக்கொண்டு சுடலை காத்தான். தன் உயிரின் உயிரான ஒரே மகன், உயிரற்ற பிணமாக எரிக்கப்பட அவனிடமே வந்தபோது அதற்குரிய கட்டணத்தைக் கண்டிப்பாக வசூலிப்பதிலே முனைப்பாக இருந்தான், உண்மைக்கு மாறாக வாழப் பிடிக்காமல் அதனால் புலையனாக மாறி இருந்த அந்தப் புண்ணியன்!

அவன்தான் சூரியகுலத் தோன்றலான **அரிங்சந்திரன்** என்ற மன்னன். திரிசங்குவின் புதல்வன். அயோத்தியை அரசாண்டான் அரிச்சந்திரன். நீதி வழுவாது, அறநெறி தவறாது வாழ்ந்ததினால், இவன் புகழ் விண்ணுலகிலும் பரவியது. மண்ணுலக வாசியைப் பற்றி விண்ணுலகத்தவரே பேச வேண்டுமானால் அவன் புகழ் எப்படிப்பட்டதென்று கூறவா வேண்டும்?

அயோத்தி மன்னன் அரிச்சந்திரனைப் பற்றித் தேவலோகத்தில் விவாதிக்கும்படி என்ன விஷயம்? எல்லாம் உண்மையைப் பற்றித்தான். எத்தனை துன்பம் வந்தாலும் 'பொய் சொல்ல மாட்டான் அரிச்சந்திரன் என்றனர் தேவர்களிலே ஒருசிலர். பொய் சொல்ல வைப்பேன்' என்று சபதமிட்டனர் வேறு சிலர்.

மன்னவனைப் பொய் பேச வைக்கும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்ள முன் வந்தவர் முனிபுங்கவரான விசுவாமித்திரர். பெரிய யாகம் ஒன்றை நடத்த வேண்டும் என்று பெருந்தொகையை யாசகமாகக் கேட்டு வந்தார். விண்ணவரும் வணங்கும் விசுவாமித்திரர் கேட்டுக் கொடுக்காதிருப்பானா அறநெறி தவறாத அரிச்சந்திரன்? கொடுப்பதாக வாக்களித்த பொருளைப் பிறகு வாங்கிக் கொள்வதாகக் கூறிப் போனார் முனிவர்.

இதன் பிறகு ஓர் இக்கட்டான நிலையில் விசுவாமித்திரரின் கோபத்துக்கு உள்ளானான் அரசன் அரிச்சந்திரன். உள்ளாகும்படியான சூழ்நிலையை உருவாக்குகிறார் முனிவர். கோசிகரின் கோபத்திலிருந்து விடுபட; அவர் விரும்பும் எதையும் தருவதாகக் கூறுகிறான் மன்னன். அதற்காக, அவன் நாட்டையே தானமாகப் பெறுகிறார் தவ சிரேஷ்டர். சொன்ன சொல் தவறாத அரிச்சந்திரன், அரண்மனை வாழ்வைத் துறந்து, அணி மணிகளைக் களைந்து, உடுத்தியிருந்த ஒரே ஆடையோடு, மாட மாளிகை, கூட கோபுரங்களையெல்லாம் இழந்து, உற்றாரும் மற்றோரும், குடிமக்களும் கதறி அழ, உண்மைக்காக ஊரை விட்டே கிளம்பினான்.

'இந்த நிலையிலும் உனக்கு வாழ்வு உண்டு மன்னவா! எனக்கு வாக்களித்தபடி நாட்டைத் தர முடியாதென்று கூறிவிடு. உன்னை விட்டு விடுகிறேன்'' என்கிறார் விசுவாமித்திரர். பொய் பேச விரும்பாத அரிச்சந்திரன் அதற்கொப்பவில்லை.. நாடிழந்து காட்டின் வழியே நடந்து கொண்டிருக்கும்போது, 'நில்' என்று ஆணையிடுகிறது ஒரு குரல். திரும்பிப் பார்க்கிறான் மன்னவன். அவனை நோக்கி வருகிறார், விசுவாமித்திரர். குல குருவாயிற்றே, கரங்குவித்து வணங்கி நிற்கிறான் அரிச்சந்திரன்.

''கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இப்படி நீ போகலாமா?'' என்கிறார் முனிவர்.

சகலத்தையும் நீர் வார்த்து வழங்கிய மன்னன், ஏதும் புரியாமல் விழிக்கிறான். நினைவுபடுத்துகிறார், முனிவர். ''அன்று என் யாகத்துக்குப் பொருள் தருவதாகக் கூறினையே. பிறகு பெற்றுக் கொள்கிறேன் என்று நான் சொல்லவில்லையா? அது வேண்டும் இப்போது.'' என்கிறார் கோசிகர். அரசனாக இருந்தபோது வாக்களித்தான். இன்றோ, ஆண்டியாக நிற்கிறான். பொருளுக்கு எங்கே



போவான்? குழம்பி நிற்கும் அவனிடம் கூறுகிறார் கோசிகர்: ''கவலைப்படாதே. 'நான் வாக்களிக்கவில்லையே!' என்று கூறிவிடு. நான் வற்புறுத்தவில்லை.''

பொய் சொல்லுவதா? சிலிர்க்கிறது அவன் உடல். ''பொறுத்துக் கொள்ளுங்கள். வாக்களித்ததை மறக்கவில்லை; மறுக்கவும் இல்லை. ஒரே ஒரு மாதம் அவகாசம் கொடுங்கள். உரிய தொகையை உங்களிடம் சேர்ப்பித்து விடுகிறேன்'' என்கிறான் அரிச்சந்திரன். இந்தமுறையும் முனிவருக்குத் தோல்வி. 'துன்பத்தை ஏற்றுத் துணிவோடிருக்கிறான். ஒரு பொய், ஒரே ஒரு பொய் சொல்ல மறுக்கிறானே?' என்ற மனவேதனையோடு திரும்புகிறார் மாமுனிவர்.

நாடாண்ட மன்னன், காடு மலையெல்லாம் கடந்து கால்நடையாகவே ஊர் ஊராகப் போகிறான் மனைவியும் மகனும் பின்தொடர. அன்றாட உணவுக்கே வழியில்லாத நிலையில் முனிவரின் வேள்விக்குப் பொருள் எப்படிச் சேர்க்க முடியும்? நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. அரிச்சந்திரனும் அலைந்துகொண்டிருந்தான். கடைசியாகக் காசியை அடைந்தார்கள். காசி நகரம் முழுதும் சுற்றி அலைந்தான் அரிச்சந்திரன். பொருள் சேர ஒரு வழியும் புலப்படவில்லை. அன்றோடு ஒரு மாதமும் முடிய இருந்தது.

'ஹரிச்சந்திரா!' என்ற குரல் மன்னனை உசுப்புகிறது.

''கேட்ட தவணை தீர்ந்து விட்டது. கொடுக்க வேண்டிய பொருள் சேர்ந்து விட்டதா?'' என்கிறார் அவர் முன் நின்ற விசுவாமித்திரர்.

தலைகுனிந்து தரையை நோக்கி நிற்கும் தரணியாண்ட மன்னனிடம் தவமுனிவர் கேட்கிறார்: ''இப்போதாவது ஒரு பொய் சொல். உன்னை விட்டு விடுகிறேன். ஒரு பொய், ஒரே ஒரு பொய்!''

வாயடைத்து நின்ற மன்னன் கம்பீரமாகச் சொல்கிறான். ''சிரேஷ்டரே! கடைசி நாள் இன்னும் முடியவில்லை. நாளைக் காலைக்குள் உங்களுக்குத் தர வேண்டியதைத் தந்து என்னை மீட்டுக் கொள்ளுவேன். தயவு செய்யுங்கள்'' என்கிறான். முனிவர் மறைகிறார். அரிச்சந்திரன் விடிவதற்குள் என் பிரச்னைக்கு எப்படி விடிவு ஏற்படப்போகிறது என்று கவலையோடு நடந்தான்.

இவன் பிரச்னை இருக்கட்டும். கைப்பிடித்த மனைவி சந்திரமதியும் மகன் லோகிதாசனும் என்ன துன்பமெல்லாம் பட்டார்கள் என்பது விவரிக்க முடியாத பெருங் கதை. அறுசுவை உண்டியோடு பசியறியாது வளர வேண்டிய பாலகனும், பஞ்சணையிலேயே படுத்துறங்க வேண்டிய பட்டமிகிஷியும் பட்ட துன்பங்கள் கொஞ்சமா நஞ்சமா? அன்றாட உணவுக்குப் பிச்சை எடுக்கும் அளவுக்குத் தங்கள் வாழ்க்கையைக் கணவன் அவலமாக்கி விட்டானே என்று ஒருபோதும் முகம் சுளிக்கவில்லை சந்திரமதி.

அரிச்சந்திரனோ வாக்களித்தபடி முனிவருக்குத் தரவேண்டிய பொருளுக்கு என்ன செய்வது என்று கலங்கிப் போனான். 'என்னையே விற்றுக் கொண்டு தான் பட்ட கடனை அடைக்கப் பணம் பெற வேண்டும்' என்ற முடிவோடு நகரின் நாற்சந்தியிலே நின்று கூவினான் நாடாண்ட மன்னன்.

''என்னை அடிமையாக ஏற்றுக் கொள்ள யாருமுண்டா? எந்த வேலையும் செய்வேன். என்னை விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கூவினான்.

அவனது அழகிய தோற்றத்தையும், கவலையாலும் துன்பத்தாலும் துவண்ட நிலையையும் கண்டவர்கள், ''இவனால் என்ன வேலை செய்ய முடியும்?'' என்று அலட்சியமாகப் போனார்கள்.

''ஐயா! தயவு செய்து என்னை விலைக்கு வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று பித்தனைப் போலக் கெஞ்சினான் அரிச்சந்திரன். ஆனால் பலன் இல்லை.

''உன்னை வாங்கிப் போய் என்ன செய்வது? உன் மனைவியையாவது வீட்டு வேலை செய்ய யாராவது வாங்கிப் போவார்கள்'' என்றான் கூட்டத்தில் ஒருவன். கலங்காதவன், கலங்கினான். உண்மையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் அதிர்ந்துபோனான், கொண்டமனைவியை விற்பதா என்று. கணவனின் மன நிலையைப் புரிந்து கொண்ட மாதரசி கூறினாள்.

''நாதா! நான் உங்களுக்கு ஒரு மகனைக் கொடுத்துவிட்டேன். என் பிறப்பின் பொறுப்பு முடிந்துவிட்டது. கண் கலங்க வேண்டாம். என்னை



விற்று நீங்கள் பட்ட கடனைத் தீர்த்து விடுங்கள். என்னைவிட உண்மை மேலானதல்லவா!'' என்றாள்.

'' உண்மைதான் !'' என்றான் அரிச்சந்திரன். பொய் சொல்லி வாழ விரும்பாத அவன் தன் மனைவியையே சந்தையில் நிறுத்தி விலை கூறலானான்.

'' வாங்குவாருண்டோ ! வாங்குவார் உண்டோ !'' என்று கூவி அழைத்தான், காசி நகர மக்களைக் காசுக்காக. கூட்டத்தினர் ஏசினர், பேசினர், கொண்ட மனைவியை விற்கும் கொடியவன் என்றனர். அத்தனையையும் தாங்கிக் கொண்டான், பொய் பேசுவதைத் தாங்காதவன் !

கூட்டத்திலே ஓர் அந்தணர் சந்திரமதியை வாங்கிக் கொள்ள முன்வந்தார். ''என்ன விலை?'' என்று கேட்டார். விலை மதிக்க முடியாதவளுக்கு எந்த விலையைக் கூறுவான் மன்னன். மௌனமாக நின்றான். வாங்க வந்தவரே விலையை நிர்ணயித்தார். ''ஐந்நூறு பொற் காசுகள் இதோ ! என் மனைவிக்கு உதவியாக வீட்டு வேலைகளைச் செய்ய இருக்கட்டும், இந்தப் பெண்!'' என்று கூறிப் பொற்காசுகள் கொண்ட முடிப்பை நீட்டினார் வேதியர். கைநீட்டி வாங்க மறுத்தவனின் இடையிலே ஒரு கயிறு கொண்டு அதை முடி போட்டுக் கட்டி விட்டுச் சந்திரமதியுடன் வீடு நோக்கி நடந்தார் அவர்.

அன்னை தன்னைவிட்டுப் போவதைக் கண்ட லோகிதாசன், '' அம்மா !'' என்று ஓடினான் பின்னோடு. கண் கலங்கினாள் சந்திரமதி. விற்கப்பட்ட பொருளான அவள், தன்னை உடைமையாக்கிக் கொண்டவரை நோக்கி, ''ஐயா, குழந்தையும் என்னோடு இருக்கட்டும். அனுமதியுங்கள்'' என்று கண்ணீர் வழிய வேண்டினாள்.

கோசிகரைப் போலக் கொடிய மனம் படைத்தவரல்ல, அந்த அந்தணர். ஆகவே லோகிதாசனுக்கும் மேற்கொண்டு இருநூற்றைம்பது பொற்காசுகளைக் கொடுத்துத் தாயையும், சேயையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு அழைத்துப் போனார். மனைவியும் மகனும் தன்னைவிட்டுப் பிரிந்து போவதையே பார்த்தபடி கல்லாக நின்றவனைப் பழக்கமான குரல் உலுக்கியது.

'' ஹரிச்சந்திரா ! கொடுக்க வேண்டிய பொருள் தயாரா ?'' விசுவாமித்திரர்தான் நின்று கொண்டிருந்தார். பொற்காசுகள் முடிப்பை நீட்டினான் மன்னவன், 'அப்பா விடுதலை!' என்ற பெருமூச்சுடன்.

'' இதென்னது ? இது எந்த மூலைக்குப் போதும் ? என் யாகத்துக்கு இது எப்படிப் போதும்?'' என்று கனன்றார்.

'' என்னிடம் வேறு பொருள் ஏதுமில்லையே முனிவரே, என் செய்வேன்!''

'' என்ன செய்வாயோ, தெரியாது. ஆயிரம் பொற் காசுகள்கூட இல்லாமல் எப்படி யாகம் நடத்த முடியும் ? முடியாவிட்டால் முடியாது என்று கூறி விடு. உன்னை நான் வற்புறுத்தவில்லை. ஒரு பொய் சொன்னால் உயிரா போய் விடும் ?''

ஒரு பொய் கூறி உயிர் வாழ விரும்பாத ஹரிச்சந்திரன், ''கொடுத்துவிடுகிறேன் கோசிகரே, கோபிக்காதீர்கள்!'' என்றுகெஞ்சினான், மறுபடியும் தோல்வியோடு மறைந்தார் விசுவாமித்திரர்.

''என் செய்வேன்? இன்னும் எப்படிப் பொருள் ஈட்டுவேன்?'' என்று அலமந்து போனான், அரசன். இருள் கவிந்தது. இரவுச் சந்தை கூடியது. மறுபடியும் தன்னையே விற்றுக் கொள்ள முயற்சி செய்தான். ''பல நாட்கள் நல்ல உணவில்லாததினால் பார்வைக்குப் பலஹீனமாக இருக்கிறேனே தவிர நான் பலசாலி. என்னை வாங்கிக் கொள்ளுபவருக்கு வஞ்சனையின்றி உழைப்பேன் '' என்று கூவினான். ஆனால் ஏளனச் சிரிப்பொலிகளைத் தவிர அவனை ஏறெடுத்துப் பார்ப்போர் யாரும் இல்லை. கடைசியில் சுடுகாட்டுக்குச் சொந்தக்காரனை ஒரு புலையன் முன் வந்தான், மன்னவனை வாங்கிக் கொள்ள. இருநூற்றைம்பது பொற்காசுகளுக்குத் தன்னை விற்றுக் கொண்ட ஹரிச்சந்திரன் சுடலை காக்கப் புலையனுடன் புறப்பட்டான். நாடு ஆண்டவன் சுடுகாட்டைக் காவல் காக்கும் ஈனமான தொழிலை ஏற்றுக்கொண்டான். அந்த நிலையிலும் பொய் பேசவில்லை என்ற திருப்தி அவனுக்கு.

''ஒரு பிணத்துக்கு முழத் துண்டும், அரிசியும் காசும் வசூலிக்க வேண்டும்.



இந்த வருவாயில் பத்தில் ஆறு பங்கு அரசாங்கத்துக்கும் மூன்று பங்கு எனக்கும் மீதமுள்ள ஒரு பங்கு உனக்கும் சொந்தம். இதன்படி தவறாமல் வசூலித்துத் தர வேண்டும்'' என்று சுடுகாட்டில் ஒரு குடிசையை அவன் இருப்பிடமாக்கி விட்டுப் போனான், அந்தச் சண்டாளன்.

பிணங்கள் வந்தன. வசூல் நடந்து கொண்டிருந்தது. சுடுகாட்டைக் காத்து உயிர் வாழ்ந்து வந்தான் ஹரிச்சந்திரன். அரியாசனத்திலே அமர்ந்து ஆட்சி நடத்தியதையும், மனைவி மகனோடு மகிழ்ச்சியாக வாழ்ந்ததையும் எண்ணியபடி ஏங்கிப் போவான். எரியும் பிணங்களின் தீப் பிழம்பிலே மகனும் மனைவியும் தோன்றுவார்கள். உள்ளம் நைந்து உருக் குலைந்து போனான், ஒரு பொய் சொல்ல விரும்பாத மன்னன்.

அந்தணன் வீட்டிலே சந்திரமதியும் லோகிதாசனும் உழைத்து ஓடானார்கள்; சிறுமைப் பட்டார்கள். பொறுமையோடு வாழ்ந்தாள் அந்தப் புண்ணியவதி. ஒரு நாள் தோட்டத்தில் அந்தணரின் பூஜைக்குப் பூப்பறிக்கப் போன போது பூ நாகம் தீண்டி மாண்டான் லோகிதாசன். உடலை எரிக்க உரிய தொகையும் தர மறுத்துவிட்டார் வேதியர். ''உங்களை இவ்வளவு பொருள் கொடுத்து வாங்கியது போதாதா? இறந்த பிறகும் எனக்குச் செலவா? போ, போ!'' என்று கூறி விட்டார். பெண்ணரசி தான் பெற்ற மகனைக் கையிலேயே தூக்கிக் கொண்டு சுடுகாட்டுக்குப் போனாள். காவல்காரனே கணவன். அதை அவள் அறியாள். வந்திருப்பதோ அவன் கரம் பற்றிய மனைவி, அவள் கையில் இருப்பதோ அவன் பெற்ற மகன். ஆனால் சுடலைக் காவலனுக்கு அவை தெரியாது. அத்தனைக்கு உருக்குலைந்து போயிருந்தார்கள் அவர்கள். அரிசியும் காசும் இல்லாமல் எரிக்க அனுமதிக்க மாட்டேன் என்கிறான், சுடலைக் காவலனான அயோத்தி மன்னன், பிணமாகி இருப்பது தன் பிள்ளை என்பதை அறியாமலேயே. தெரிந்தாலும் தான் என்ன? தன் எஜமானனுக்கு உரியதை வசூலிக்காவிடில் நேர்மை தவறியவனாகி விடமாட்டானா?

இறந்த உடலை எரிக்கக்கூட முடியாத நிலையில் தாய் கதறுகிறாள். ''ஹரிச்சந்திர மன்னனின் மைந்தன் இவன். இளவரசன்!'' என்று கதறும்போது கணவனும் மனைவியும் இனம் கண்டு கொள்கிறார்கள். 'என் பங்கை வேண்டுமானால் இழப்பேன். என் எஜமானனுக்குச் சேர வேண்டியதை வசூலிக்காதிருக்க மாட்டேன்' என்று உறுதியோடு இருக்கிறான் சுடலைக் காவலன் ஹரிச்சந்திரன்.

''முழுத் துண்டாக உன் மேல் ஆடையைக் கொடு'' என்கிறான் கணவன்.

''மேல் ஆடையைக் கொடுத்தால் என் உடலை மூடிக் கொள்ள வஸ்திரம் இருக்காதே?'' என்கிறாள் மனைவி.

''அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. இங்கு நான் சேவகன். என் எஜமானனுக்குப் பொய் கூறி ஏமாற்ற முடியாது'' மேலாடையைத் தர அவளை வற்புறுத்தும் போது ஒரு கரம் அவன் கரத்தைப் பற்றுகிறது. ஒரு குரல் கணீரென்று ஒலிக்கிறது.

''ஹரிச்சந்திரா, உனக்கு அளிக்கப்பட்ட சோதனைகளில் நீ வெற்றி பெற்று விட்டாய்.'' குரலுக்கு உடையவன் சுடலைக்கதிபதியான சண்டாளன்.

''சோதனையா? எனக்கா?'' திடுக்குறுகிறான், ஹரிச்சந்திரன். அதே சமயம் வானத்திலே ஒரு மின்னல். தேஜோ மயமான ஒளிப் பிழம்பு. அதன் நடுவே தேவர்கள்.

''இதெல்லாம் என்ன?'' என்று திகைக்கிறான் ஹரிச்சந்திரன்.

தேவர் தலைவன் இந்திரன் புன்முறுவலோடு விளக்குகிறான். ''ஹரிச்சந்திரா! உண்மையிலிருந்து எந்த நிலையிலும் வழுவாதவன் நீ என்பதை உறுதிப்படுத்தவே இத்தனை சோதனைகளை நாங்கள் உன் மீது நடத்தினோம். உன் உறுதி உன்னை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்திவிட்டது.''

''தேவா! என் உறுதியைப் பரிசோதிக்க என் ஒரே மகனின் உயிரையே பறிக்கலாமா?'' என்று கேட்டான், ஹரிச்சந்திரன், புத்திர பாசம் மேலோங்க.

''உன் மகன் மரிக்கவில்லை, அதோ பார்'' என்றான் இந்திரன். லோகிதாசன் சிரித்தபடி அருகே நின்றான், உயிரோடு. இன்னொரு குரலும் அரு



கிலே கேட்டது. விசுவாமித்திரர்! ''மன்னவா, உன்னை ரொம்பவும் கொடுமைப்படுத்திவிட்டேன். என்னை மன்னித்துவிடு.''

''குருதேவா.... தாங்களா என்னிடம் மன்னிப்புக் கேட்பது?''

''உன் ராஜ்யத்தை உனக்கே திரும்பத் தருகிறேன். என்னோடு கிளம்பு.''

''எப்படி முடியும்? என்னை நானே ஒருவருக்கு விற்றுக் கொண்ட பிறகு அவர் அனுமதியின்றி வர முடியாதே!''

''ஹரிச்சந்திரா! நீ யாருக்கும் அடிமையில்லை. சத்தியத்தைக் கடைப்பிடிக்கும் உனக்குத்தான் நாங்கள் எல்லோரும் அடிமைகள். உன்னை விலை கொடுத்து வாங்கியவன் தர்மதேவதையான எமன்தான். எல்லாமே எங்களால் திட்டமிடப்பட்ட செயல்கள்.

''ஹரிச்சந்திரா! நீயே உண்மையான அரசன். உன் பிரஜைகளோடு மகிழ்வுடன் வாழ்வாயாக'' என்று வாழ்த்திவிட்டுத் தேவரும் விசுவாமித்திரரும் மறைந்தனர்.

உண்மைக்காக வாழ்ந்து உயர்ந்த ஹரிச்சந்திரன் கதை இதுதான். எல்லோருக்கும் தெரிந்த கதையானாலும் அதன் வழி நடப்பது என்றுமே நல்லது என்பதை அண்ணல் காந்தி வாழ்ந்து காட்டினார். நம்மையும் அப்படி வாழச் சொல்லிவிட்டுப் போனார். காந்தியடிகளின் உள்ளத்தைக் கவர்ந்த கதை இது. ஒவ்வொருவருமே ஹரிச்சந்திரர்களாக வாழ வேண்டும் என்பது அண்ணல் காந்தியடிகளின் விருப்பம். ●

'காப்பி' அடிக்கத் தெரியவில்லை!

பள்ளிக்கூடத் தேர்வு என்றதும் விழுந்து விழுந்து படிக்கிறோம்.

இரவில்கூடக் கண் விழித்துப் படித்து, அதிக மதிப்பெண்கள் வாங்கத் துடிக்கிறோம்.

தேர்வு என்பது படித்ததை மறவாமல், கேட்ட கேள்விகளுக்குச் சரியான விடைகள் எழுதுவதுதானே தவிர 'காப்பி' அடிப்பது அல்ல!

சில சோம்பேறி மாணவர்கள் முயற்சி எதுவும் இல்லாமல், படிக்காமல் தேர்வு எழுத வந்துவிடுகிறார்கள். எந்தத் தைரியத்தில்?

எல்லாம் 'காப்பி' அடிக்கும் தைரியத்தில்தான்!

மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கையில் ஒரு சம்பவம் நடந்தது:

மோகனதாஸ் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். ஒரு சமயம் பள்ளியைப் பரிசோதிப்பதற்காகக் கல்வித் துறை அதிகாரி ஒருவர் வந்திருந்தார். எல்லா வகுப்பையும் பார்வையிட்டு வந்த அவர் மோகனதாஸ் இருந்த வகுப்புக்கும் வந்தார்.

எழுத்துக்கூட்டி எழுதும் பயிற்சிக்காக அவர் ஐந்து சொற்களைக் கூறி மாணவர்களை எழுதச் சொன்னார். அவற்றுள் ஒன்று 'கெட்டில்' (*Kettle*) என்பது. இதை அந்தப் பையன் சரியாக எழுதினானா?

இதோ, அதை மகாத்மா காந்தியடிகளே சொல்கிறார்:

''...அதை நான் தவறாக எழுதி விட்டேன். ஆசிரியர் தம் பூட்ஸ் முனையால் என் காலைச் சீண்டித் தூண்டினார். நான் புரிந்து கொள்ளவில்லை. நாங்கள் பக்கத்துப் பையனைப் பார்த்துக் 'காப்பி' அடிக்காமல் பார்த்துக் கொள்வதற்காகவே ஆசிரியர் அங்கே இருக்கிறார் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆகையால், என் பக்கத்துப் பையனின் சிலேட்டைப் பார்த்து அப்பதத்தின் எழுத்துக்களைக் காப்பியடிக்க அவர் என்னைத் தூண்டுகிறார் என்பதை நான் அறியவில்லை. இதன் பலன் என்னவெனில், என்னைத் தவிர மற்ற எல்லாப் பிள்ளைகளும் அப்பதத்தைச் சரியாக எழுதியிருந்தனர். நான் ஒருவனே முட்டாளாக இருந்துவிட்டேன். இந்த முட்டாள்தனத்தை நான் உணரும்படிச் செய்வதற்கு ஆசிரியர் பிறகும் முயற்சி செய்தார். ஆனால், அதனாலும் பயனில்லை. 'காப்பி' அடிக்கும் வித்தையை நான் என்றுமே கற்றுக் கொள்ளவில்லை!''

— பி. வி. கிரி




அண்ணல் காந்தி அடிகள் ஒரு முறை அரிஜன முன்னேற்றத்துக்காகப் போராடிய போது உண்ணாவிரதம் இருந்தார். அந்த நாட்களில் அவரைத் தரிசிக்கத் தினமும் பலர் வந்து போவார்கள். ஒரு நாள் ஓர் அரிஜனச் சிறுவன், மகாத்மாவைப் பார்க்க வந்தான். அவன் பெயர் விடோபா. அச்சிறுவன் காந்தியை நெருங்கி வந்து, ''பாபுஜி, நீங்கள் மிகவும் பலமற்றுக் காணப்படுகிறீர்கள்; நீங்கள் எப்போது இந்த உண்ணா நோன்பை நிறுத்தப் போகிறீர்கள்!'' என்று அன்புடன் கேட்டான். அதற்கு அடிகளார், ''இன்னும் நான் அது பற்றி முடிவு செய்யவில்லை. ஆனால் உன் கையால் தருகின்ற பழத்தைச் சாப்பிட்டுத் தான் நான் உண்ணாவிரதத்தை முடிக்கப் போகிறேன்! என்ன சரியா ?'' என்று கேட்டார்.

இதைக் கேட்ட விடோபாவுக்கு அளவில்லாத வியப்பும் சந்தோஷமும் உண்டாயிற்று. அத்துடன் காந்திஜி சொல்வது உண்மைதானா என்ற சந்தேகம்கூட வந்து விட்டது. 'நம்மைப் போன்ற அரிஜனச் சிறுவன் கொடுத்தால் அந்தக் கூட்டத்தில் காந்திஜி பழங்களைப் பெற்றுக் கொள்வாரா?' என்று கூட அவன் நினைத்தான். எனினும், நம்பிக்கையுடன் தனது தாயார் தனக்குக் கொடுத்து தான் சேமித்து வைத்திருந்த காசுகளைப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டான். இரண்டு நாட்களுக்கெல்லாம் தெருவில் நிறைய ஜனங்கள் செல்வதைக் கண்டான். அவர்கள் பேசிக் கொண்டு செல்வதைக் கேட்டுக் காந்திஜி அன்று மாலை தமது உண்ணா நோன்பை முடித்துக் கொள்ளப் போகிறார் என்று அறிந்து அவன் மிகவும் பரபரப்படைந்தான்.

கூடவே அவனுக்குத் துக்கமும் வந்தது. ''காந்திஜி நம்மிடம் சொல்லி அனுப்பவில்லையே; இன்று மாலை அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தப் போகிறாராமே? ஒரு வேளை நான் பழத்துடன் வருவேன் என்று எதிர்பார்க்கிறாரா ?'' என்றெல்லாம் சிந்தித்தான். உடனே வீட்டுக்குள் வந்து தான் சேர்த்து வைத்திருந்த காசுகளை எண்ணிப் பார்த்தான். மொத்தம் ஐந்து அணா இருந்தது. அதை எடுத்துக் கொண்டு ஒரு பழக் கடைக்குச் சென்றான் விடோபா. அங்கிருந்த சிறந்த பழங்களைக் காட்டி விலை கேட்டான். பழத்தின் விலைக்கும் அவன் வைத்திருந்த காசுக்கும் ஏக வித்தியாசம் இருந்தது. விடோபா அந்தக் கடைக்காரனிடம் அந்தப் பழங்களை, தான் வைத்திருக்கும் காசுக்குக் கொடுக்கும்படியும் அதைச் சாப்பிட்டுத்தான் காந்தி அடிகள் உண்ணாவிரதத்தை முடிக்கப் போகிறார் என்றும் சொல்லிப் பார்த்தான். ஆனால் கடைக்காரனோ விடோபாவைக் கேலியாகப் பார்த்துச் சிரித்துப் பழங்களைத் தர மறுத்து விட்டான்.

மனம் வருந்திய விடோபா இன்னொரு சிறிய பழக்கடைக்குச் சென்று தன்னிடம் இருந்த காசுகளைக் கொடுத்து இரண்டு வாடி வதங்கிப் போன ஆரஞ்சுப் பழங்களை வாங்கிக் கொண்டு காந்தியடிகள் உண்ணாநோன்பு இருந்த இடத்துக்கு வந்தான். அங்கு ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். அண்ணலின் எதிரே பழ ரசமும், பழங்களும் நிறைய இருந்தன. காந்தியடிகள் அவற்றைப் பார்க்காமல் வாசல்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். மற்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'மற்றத் தலைவர்கள்கூட வந்து விட்டார்களே! இன்னும் ஏன் பாபுஜி யாருக்கோ




காத்துக் கொண்டிருப்பது போல் பார்த்துக்கொண்டிருக்கிறார்?' என்று எல்லோரும் எண்ணினர்.

அவர்கள் நினைப்பை அறிந்த காந்தியடிகள் அவர்களைப் பார்த்து, ''விட்டோபா என்ற பையன் இரண்டு நாட்களுக்கு முன் என்னைப் பார்க்க வந்திருந்தான். அவன் கையால் தருகிற பழத்தைச் சாப்பிட்டுத்தான் நான் உண்ணா விரதத்தை முடிக்க வேண்டும். அந்தச் சிறுவனிடம் நான் அவ்வாறு சொல்லிவிட்டேன்'' என்றார்.


அவர் அப்படிச்சொல்லிக் கொண்டிருக்கையிலேயே கூட்டத்தில் புகுந்து முண்டியடித்து அண்ணலுக்கு முன் வந்து நின்றான் விட்டோபா கையில் பழத்துடன். அவனை அருகில் அழைத்தார் காந்திஜி. விடோபா மிகவும் வெட்கத்துடன் சென்று தான் வாங்கி வந்த பழங்களைக் கொடுத்தான். பாபுஜி சிரிப்புடன் அவற்றை வாங்கி அத்தனை பேர் எதிரிலும் சாப்பிட்டார். அங்கிருந்த அனைவரும் ''ஒரு சிறு பையனுக்குக் கொடுத்த வார்த்தையைக்கூட காந்திஜி காப்பாற்றுகிறாரே'' என்று வியந்து போற்றினர். விடோபாவுக்கு ராமர் அணை கட்டு கையில் அணில் உதவி செய்தது போல் நம்மையும் ஒரு பொருட்டாக மதித்து காந்தித் தாத்தா நடந்து கொண்டாரே என்று சொல்லி முடியாத மகிழ்ச்சி.

நீங்களே பாருங்கள் அண்ணலின் அந்த சொல் தவறாச் சீலத்தை. யாரும் கேவல மானவர் அல்ல என்பதை நீங்கள் உணர வேண்டும். நாணயம் உள்ள மனிதனையே நாடு மதிக்கும் என உணர்ந்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதியுடன் இருங்கள். வெற்றியும் புகழும் உங்களைத் தேடி வரும்.





இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த உத்தமர்களின் பெயராலேயே காந்தித் தாத்தாவின் உருவத்தை உருவாக்கியிருக்கிறார், கொ. வெங்கடசாமி. யார் யாருடைய பெயர்கள் உருவத்தில் உள்ளன என்று கண்டு பிடியுங்களேன்.


நந்து சுந்து மந்து
14
கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்
ஊரில் ஒரு பெரிய சர்க்கஸ் கூடாரமிட்டிருந்தது. அதிலுள்ள மிருகங்களைப் பார்க்க மந்துவோடு நந்துவும் சுந்துவும் போகிறார்கள்.
டேயப்பா! சிங்க கர்ஜனை என்பது பொருத்தம் தான்.
நம்ம தாத்தா ஏன் ரொம்ப சோகமா இருக்கார்?
மந்து தாத்தாக் குரங்கிடம் தாமதிக்க நந்து சுந்து நகர்ந்து விடுகின்றனர்.
ஒரு வேளை கூண்டிலடைபட்டிருக்கிறது தாத்தாவுக்கு வேதனையா இருக்கோ? கூண்டைத் திறந்து விட்டாப் போச்சு.
ஐயோ! தாத்தாவுக்குத் திடீர்னு என்ன வந்தது? சோம்பிக் கிடந்தவர் எம்பிக் குதிச்சு.... யம்மாடி! என்னமாத் தள்ளிட்டுப் போறார்?
ராட்சத மனிதக் குரங்கு கூண்டிலிருந்து தப்பி விடவே, சர்க்கஸ் ஊழியர்கள் பரபரத்தனர்.
தாத்தாவுக்கு இத்தனை பலமா? என் முன்னாலே எல்லாரும 'திர்' அடிக்கிறதே....
உன் வேலை தானே இது? எங்கள் குரங்குக்குப் பதில் நீ இதனுள்ளே கிட.
சர்க்கஸ் ஊழியர்கள் பெரிய குரங்கைத் தேடிப் போய்விட, குட்டிக் குரங்கைக் கண்ட கூட்டத்தினர் அதனிடம் வம்பு செய்கின்றனர்.
சுருட்டுக் குடிக்கத் தெரியுமா உனக்கு.
இந்தா நெருப்புப் பெட்டி...


நெருப்புப் பெட்டி கைக்குக் கிடைத்ததும் மங்குவின் மூளை வேலை செய்தது. அதன் உபயோகம் அதற்குத் தெரியுமே.
இந்தக் குப்பை கூளங்களைக் குவித்து நெருப்பு மூட்டுகிறேன்.
கூண்டு வண்டியின் கீழ்ப்பலகை நான் நுழையுமளவுக்கு எரிந்து விட்டது. போதும் இனி இதை அணைத்து விடலாம்.
ஹைய்யா! இரண்டு குதிகுதித்ததுமே கருகிய பலகையில் ஓட்டை விழுந்து விட்டதே... இனி சுலபமாகத் தப்பி விடலாம்.
தப்பிய மங்கு, நந்து சங்குவைக் காணாமல் திடுக்கிடுகிறது. யார் கண்ணிலும் படாமல் வெளியேறுகிறது. வீதிக்கு வந்தபோது எல்லோரது கவனமும் அதன் மீது பதியக் கூட்டம் கூடுகிறது. அதிலே ஒரு சர்க்கஸ் ஊழியர்.
அட நீ எப்படித் தப்பினே? உன்னைக் கூண்டிலல்லவா அடைத்தோம்? வா... வா
அத்தனை சுலபமா என்னைப் பிடிக்க முடியாது தம்பீ, எங்கே நீயும் தாவு பாக்கலாம், என்னைப் போல...
ஹா... ஹா! காரு மேலே காரு. அது மேலே நானு. பலே ஜோரு! எத்தனை காட்சிகள்! அடே! அதோ நம்ப சங்கு அந்தப் பஸ்ஸிலே போறாரே.

தொடரும்.



இசைக்குயில் ஜென்னி லிண்ட்

— கௌசிகன்

அவளுக்கு ஒன்பது வயதாகும் வரை அவளுடைய பாடல்களைக் கேட்டு மகிழும் ரசிகர் கூட்டம் என்பது அவளுடைய ஒரே ஒரு கருப்புப் பூனைதான்! ஜன்னல் கட்டையில் உட்கார்ந்து கொண்டு தனது சொப்புப் போன்ற சின்னஞ் சிறிய வாயைத் திறந்து இசைப்பாள் அவள். அவளது குரல் வளையிலிருந்து பல்வேறு பறவைகளின் இனிய ஓசை எழும். முறையாகச் சங்கீதம் பயின்ற குழந்தையா அவள்? இல்லை. அவளுக்கு யாரும் பாட்டுச் சொல்லித் தரவில்லை. அதற்கான சூழ்நிலையிலும் அவள் வளரவில்லை. அப்படியானால் அந்தச் சின்னப் பெண் எப்படிப் பாடினாள்? அவள் பாடுவதில்லை. இயற்கையாகவே அந்தக் குழந்தை உள்ளத்தில் பாட வேண்டும் என்று ஓர் ஆசை, தவிப்பு. அதைத் தணித்துக் கொள்ளத் தனிமையில் அமர்ந்து கொண்டு தன்னிச்சையாகக் குரல் எழுப்பிக் கொண்டிருப்பாள். அவளது குரலின் இனிமையிலே சொக்கிக் கொண்டிருக்கும் அந்தக் கருப்புப் பூனை!


ஸ்டாக்ஹோம் நகரில் 1820ம் ஆண்டு பிறந்தாள் அந்தக் குழந்தை. பெற்றோர் அவள் பிறந்ததை மகிழ்ச்சியாக வரவேற்கவில்லை. ஏனென்றால் அவர்கள் அத்தனை ஏழைகள். குழந்தைக்கு ஜென்னி லிண்ட் என்று பெயரிட்டாள் தாயார். குடும்பச் செலவைச் சமாளிக்க ஜென்னியின் தாய் ஒரு சின்னப் பள்ளிக்கூடத்தை நடத்தி வந்தாள். நாளெல்லாம் தன்னைவிட வயதில் பெரிய பெண்களுடன் அந்தப் பள்ளியில் உட்கார்ந்திருப்பாள்—குழந்தை ஜென்னி. கொஞ்ச நாளில் அங்கும் தன்னை யாரும் விரும்பவில்லை என்பதை உணர்ந்தாள். தன்னை, தன் குரலை விரும்பிக் கேட்டு மகிழும் கருப்புப் பூனையோடு தனிமையை நாடி ஒதுங்கிப் போனாள் அந்த ஒன்பது வயதுக் குழந்தை.

ஒரு நாள் ஜென்னி வழக்கம் போல் ஜன்னல் கட்டையில் அமர்ந்தபடி தன் அன்புப் பூனைக்குப் பாடிக் கொண்டிருந்தாள். அப்போது ராயல் தியேட்டரைச் சேர்ந்த யாரோ ஒருவர் தெருவிலே போனார். ஜென்னியின் இனிமையான குரல் அவரைக் கவர்ந்தது. அந்த ரீங்காரத்தைக் காதில் தேக்கியபடி ராயல் தியேட்டருக்கு ஓடினார். அங்கு இசைப் பயிற்சி அளிக்கும் ஆசிரியரிடம் ''நான் இதுவரை இம்மாதிரியான ஓர் இனிய குரலைக் கேட்டதே இல்லை'' என்று பாராட்டினார். இசை ஆசிரியர் ஜென்னியை அழைத்து வரும்படி அவள் தாயாரிடம் கேட்டுக் கொண்டார். ஜென்னியைப் பாடச் சொல்லிக் கேட்டவர் தியேட்டர் நிர்வாகியிடம் ஓடினார் பரபரப்புடன்.

''நான் ஓர் ஒப்பற்ற இசை மேதையைக் கண்டு பிடித்துவிட்டேன். நாம் அவளுக்கு முறையாகப் பயிற்சி அளித்தால் ஒளிவிடும் வைரமாக ஜ்வலிப்பாள் அவள்!'' என்றார் இசை ஆசிரியர். அவர் மேதை என்று குறிப்பிடும் ஜென்னிக்கு ஒன்பது வயது என்று அறிந்தபோது நாடக அரங்கத் தலைவர் சீறினார். ''ஒன்பது வயதா? இது நர்சரிப் பள்ளிக்கூடமல்ல, நாடக அரங்கமாக்கும்!'' என்றார்.

''அந்தக் குழந்தையின் குரலைக் கேட்ட பிறகு இதைச் சொல்லுங்கள்'' என்றார் இசையாசிரியர். இசையைப் பற்றி அவருக்குத்தானே தெரியும்? வேண்டா வெறுப்பாக ஜென்னியின் இசையைக் கேட்க இசைந்தார் நிர்வாகி. ஜென்னி குயில் போன்ற தன் குரலால் பாடினாள். நிர்வாகியின் விழிகளிலிருந்து நீர் வழியலாயிற்று. ஜென்னி ராயல் தியேட்டர் என்ற கலையரங்கின் பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்பட்டாள். முதலில் ஜென்னிக்கு நடிப்புக்கலையில் பயிற்சி அளித்தார்கள். நாடகங்களில் குழந்தைப் பாத்திரங்களை அவளுக்கு அளித்து நடிக்கச் செய்தார்கள். பதினேழாவது வயதில் புகழ் பெற்ற இசை நாடகங்களில் (ஆபரா) பங்கு கொள்ளலானாள் ஜென்னி.

ஸ்டாக்ஹோம் புகழ்பெற்ற இசைக் கேந்திரமல்ல. தாயகத்து மக்கள் அவளது குரலின் இனிமையிலே சொக்கிப் போகிறார்கள், உண்மைதான். ஆனால், அது மட்டுமே அவள் முழுத் திறமைக்கும் சக்திக்கும் அளவுகோலாகிவிடுமா? அடுத்த ஆண்டு இத்தாலி நாட்டிலிருந்து ஒரு புகழ்பெற்ற இசைக் குழு



ராயல் தியேட்டரில் பாடுவதற்கு வந்திருந்தது. ஜென்னி முதன் முதலாக உயர்ந்த இசை என்பது எது என்பதை அறிய உதவியது அந்த நிகழ்ச்சி. மிகச் சிறந்த இசை அது. அதை நிகழ்த்தியவரிடம் போனாள் ஜென்னி.

''இதுப் போலப் பாடுவதற்கு நான் எங்கு போய்ப் பயிற்சி பெற வேண்டும் ?'' என்று கேட்டாள்.

''பாரிஸில், இசை மேதை கார்ஸியா அவர்களிடம்'' என்ற பதில் கிடைத்தது. பாரிஸ்......! அதைவிடச் சொர்க்கம் என்றேகூடக் கூறி இருக்கலாம் அவர். தன் சம்பாத்தியத்தில் தாய்க்கு உதவியது போக அவளிடம் இருந்தது மிகச் சொற்பம்தான். அதைக் கொண்டு அந்தக் குபேர புரிக்குப் போக முடியுமா ? பாரிஸில் வாழ்ந்து கொண்டு இசை பயிலுவது என்பது இலேசான காரியம் அல்லவே !

ஆனால் இசையிலே ஜென்னிக்கு இருந்த வெறி அதற்கு ஒரு வழியையும் வகுத்துக் கொடுத்தது. ஸ்வீடன் தேசம் முழுதும் ஊர் ஊராகச் சென்று இசை நிகழ்ச்சிகள் நடத்துவது என்று முடிவு செய்தாள். தொண்டை புண்ணாகிக் கம்மும் வரை, ஆயாசத்தினால் தடுமாறும் வரை பொருள் சேர்ப்பதற்கென்றே பாடினாள், பாடினாள், பாடிக் கொண்டே உலா வந்தாள். பட்ட பாடு பாழாகிவிடவில்லை. பாரிஸ் போவதற்கான பணம் சேர்ந்தது. தன் எதிர்காலத்தைவிடத் தன் சேமிப்பிலேயே தன் பெற்றோர் கருத்தாக இருப்பார்கள் என்பதை அறிந்த ஜென்னி அவர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள், முறைப்படி இசைத் தேர்ச்சி தரும் பாரிஸ் நகரை நோக்கி.

இசை மேதை கார்ஸியாவின் முன் போய் நின்றாள் ஜென்னி. ஒரே பரபரப்பு. மாமேதையான அவர் தரிசனமே அவளைச் சிலிர்க்கச் செய்துவிட்டது. அந்த ஆனந்தத் தவிப்போடு அவள் பாடி முடித்ததும் கார்ஸியா

தலையை ஆட்டி அவளது இசையை அங்கீகரிக்க மறுத்த அந்த வேளையில் ஏமாற்றத்தினால் அவள் இதயம் துவண்டு துடித்துப் போயிற்று.

''அம்மா, நீ அளவுக்கு அதிகமாகப் பாடி உன் குரலைப் பாழாக்கிக் கொண்டு விட்டாய்'' என்றார் கார்ஸியா? அவரிடம் பயிற்சி பெற வேண்டும் என்பதற்காகத்தானே அவள் ஓய்ச்சல் ஒழிவு இன்றிப் பாடிப் பாடிப் பணம் சேர்த்தாள். 'பாடப் பாட ராகம் என் பார்களே. பாடிப் பாடியே என் குரல் பாழாகி விட்டது என்கிறாரே இவர்?'

ஜென்னி தளர்ந்துவிடவில்லை. நம்பிக்கைப் பொறி அவள் உள்ளத்தில் மினுக்கிட்டுக் கொண்டிருந்தது. பரிதாபமாக அவரிடமே கேட்டாள்.

''இப்போது நான் என்ன செய்வேன், செய்ய வேண்டும் ?''

நீர் வழியும் அவளது விழிகளையும் இசை ஆர்வம் மிக்க அவளது இதயத்தையும் உணர்ந்த கார்ஸியா அன்போடு ஆதரவாகக் கூறினார்.

''இன்னும் ஆறு வாரங்களுக்கு நீ பாடவே கூடாது. பேச்சும்கூடத் தணிவான குரலில் ரகசியம் பேசுவது போல முணு முணுக்க வேண்டும். அதுவும் அவசியமானால் மட்டுமே. இப்படி ஆறு வாரங்கள் இருந்த பிறகு மறுபடி உன் பாட்டை நான் கேட்டுப் பின் ஒரு முடிவைச் சொல்லுகிறேன்'' என்றார்.

ஆறு வாரங்கள் ! ஆறு நிமிஷங்கள் கூட ராகம் இசைக்காமல் இருக்கமாட்டாளே ஜென்னி. ஆனால் இசை மேதையின் அறிவுரைப்படி இருந்துதானாக வேண்டும். கட்டுப்பாட்டுடன் அந்தக் கடினமான நிபந்தனையை ஏற்றுமுடித்து அவர் முன் போய் மறுபடி பாடியதும் ஜென்னி மகிழ்ச்சியால் பைத்தியக்காரி போல் கூச்சலிட்டாள். 'கார்ஸியா என் குரல் இனிமையிலே திருப்தியடைந்து விட்டார் !''

விரைவிலேயே ஐரோப்பா முழுமையுமே அவளது குரல் இனிமையிலே திருப்தி அடைந்தது. திரும்பத் திரும்பக் கேட்கும் ஆவலிலே அது கிடைக்காத போது ஏக்கமும் பிடித்துப் போயிற்று. பெர்லின், வியன்னா, ஃபிராங்ஃபர்ட் ஆகிய நகரவாசிகள் ஜென்னி லிண்டின் அபூர்வமான குரல் இனிமையிலே சொக்கிக் கிறங்கிப் போனார்கள். **'ஸ்வீடன் நாட்டு நைட்டிங்கேல்'** என்ற புகழ்ப் பெயரையும் சூட்டினார்கள். கடல் அலை போன்ற கைத் தட்டல் ஆரவாரம், வான் மழை போன்ற மலர் மழையும், பொருள் மழையும் அவளை மூழ்கடித்தாலும் அவள் இதயம் தாயகத்தை நினைத்து ஏங்கலாயிற்று. 'என் தாயகத்துக்கு, இனிமையான என் ஸ்வீடன் தேசத்துக்குப் போக வேண்டும்' என்று அடிக்கடி புலம்பலானாள்.

பல வருடங்கள் இசைக் குயிலாகக் கலை வானிலே சிறகடித்துப் பறந்த ஜென்னி, பூமியில் ஓரிடத்தில் காலூன்றித் தனக்கென ஓர் வீட்டையும் குடும்பத்தையும் உருவாக்கிக் கொண்டு வாழ ஆசைப்பட்டாள்.

எவ்வளவோ இசை நாடகங்களில் பாடினாள். சில வேளைகளில் தனி இசைக் கச்சேரிகளும் செய்து மகிழ்வித்தாள். அம்மாதிரியான கச்சேரிகளில் தன் தாய் நாடான ஸ்வீடனின் நாடோடிப் பாடல்களைப் பாடி மகிழ்வாள். அப்படிப்பட்ட ஓர் ' இசை நிகழ்ச்சியின் போது, அறிமுகம் இல்லாத ஓர் இளம் பியானோக் கலைஞன் அவளுக்குப் பக்க வாத்தியம் வாசிக்க அமர்த்தப்பட்டான். அவனுக்கு ஜென்னி ஊக்கம் அளித்தாள். அந்த இளைஞனை அவளுக்குப் பிடித்திருந்தது. அவள் புகழுக்காகப் பொறாமை கொள்ளாதவனாக இருந்தான் அவன். ஆகவே, அவள் தன் இசை நிகழ்ச்சியிலே அவன் பியானோ வாத்தியத்தில் இரு தனி ஆவர்த்தனங்கள் நிகழ்த்த அனுமதித்தாள். 'ஓட்டோ கோல்ட்ஸ்மிட்' என்ற அந்த இளைஞன் அன்றைய நிகழ்ச்சியின் பாராட்டை ஜென்னியுடன் பங்கு போட்டுக் கொண்டான். பின்னால் அவள் வாழ்க்கையிலும் பங்கு பெறும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது.

ஜென்னி இப்போது 'செல்வச் சீமாட்டியாக சுகபோகங்களில் திளைத்து மகிழக்கூடிய தகுதியை அடைந்திருந்தாள். புகழ், பொருளைக் கொண்டு வந்து குவித்திருந்தது. ஆனால் ஜென்னி அப்படியொரு வாழ்க்கையை விரும்பவில்லை. ஒரு காலத்தில் பரம ஏழையாக, பிறரால் விரும்பப்படாதவளாகத் தான் வாழ்ந்ததை அவள் மறக்கவில்லை. ஆகவே அவள் தன் வருவாயையெல்லாம் ஏழைகளின் வாழ்க்கை வளம் பெறுவதற்காக வாரி வழங்கினாள். ஸ்வீடனில் விரும்பப்படாத குழந்தைகளுக்கான ஓர் இல்லத்தை நிறுவினாள்.

லண்டனிலிருந்து அவள் இசைக்கு அழைப்பு வந்தது. அவளது இசை நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகளைப் பெற மக்கள் பல வாரங்கள் 'க்யூ'வில் நின்று வாங்கினார்கள். அவள் எந்த எந்த இடங்களில் வண்டியிலிருந்து இறங்கி உள்ளே செல்கிறாளோ அங்கெல்லாம் காத்திருந்து அவளைக் காணுவதற்கும் கூட டிக்கெட் வைத்து அவைகளையும்

முன்னதாகவே விற்று விட்டார்கள். முன்பு கிடைத்த பல நகரங்களின் வரவேற்புக்கள் எல்லாம் ஒன்றுமே இல்லை என்று கூறும் அளவுக்கு லண்டனில் ஜென்னிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. லண்டன் நகரில் இரவு நிகழ்த்திய இசை நிகழ்ச்சிக்குப் பிறகு ஜென்னி அன்றிரவு முழுதும் தூங்கவில்லை — மகிழ்ச்சியின் சுமையினால்! ஜென்னி, ஜென்னி — என்று எதற்கும் அவள் பெயரைச் சூட்டினார்கள், ஆனால் ஜென்னியோ இவைகளையெல்லாம் மிஞ்சும்படியான ஒரு காரியத்தைச் செய்தாள். நார்விச்சில் நோயுற்ற குழந்தைகளின் பராமரிப்புக்காக ஒரு விடுதியை நிறுவி அதற்குத் தன் பெயரையும் ஏராளமான பொருளையும் நன்கொடையாக அளித்தாள்.

ஸ்வீடிஷ் நைட்டிங்கேலின் இனிய இசையைக் கேட்கும் ஆவலில் அமெரிக்காவும் ஜென்னியை அழைத்தது. அமெரிக்காவில் ஜென்னி இசை நாடகங்களில் (ஆபரா) மட்டும் பாடவில்லை. இசைக் கச்சேரிகளுமே (கான்ஸர்ட்ஸ்) செய்தாள். இதற்கு அவளுக்கு உதவியாக ஒரு பக்க வாத்தியக் கலைஞர் தேவைப்பட்டார். பல வருஷங்களுக்கு முன்பு ஒரு தடவை தனக்குப் பியானோ வாசித்த அந்த இளைஞனை அவள் மறக்கவில்லை. அழைப்பு விடுத்தாள் அவனுக்கு. ஜென்னியிடமிருந்து அழைப்பு வரவே ஓட்டோ ஓடோடி வந்தான் அமெரிக்காவுக்கு. அவள் ஓட்டோவை மறுபடி பார்த்த அந்த விநாடியே ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். அவள் இதயம் எதற்காக இத்தனை காலமாக ஏங்கிக் கொண்டிருந்ததோ அது கிடைத்துவிட்டது. அன்புக் கணவன், அமைதியான குடும்பம்! அவனிடம் தூய்மையான காதலையும் இசையையும் கண்டாள் ஜென்னி. இருவரும் அமெரிக்காவிலேயே திருமணம் செய்து கொண்டார்கள். சேர்ந்தே தாயகம் திரும்பினார்கள். இப்போது அவளுக்குத் 'தாயகம்' என்பது இங்கிலாந்து.

ஜென்னியின் பெற்றோர் இறந்துவிட்டார்கள். ஆகவே ஜென்னி இங்கிலாந்திலேயே மால்வர்ன் ஹில்ஸ் என்னும் இடத்தில் தனக்கென ஓர் அழகான வீட்டை அமைத்துக் கொண்டாள். அங்கு அவள் தாயானாள். தன் வாழ்வின் மிக மிக மகிழ்ச்சி நிறைந்த நாட்களை அங்கு கழித்தாள். தன் தோட்டத்திலே வாழும் குயில்களோடு சேர்ந்து பாடினாள். தன் அன்புக் குழந்தைகளை மகிழ்விக்கப் பாடினாள். எல்லாவற்றுக்கும் மேலாக மாலை வேளைகளில் கணவன் பியானோ வாசிக்கும் வேளைகளில் அவனுக்கு அனுசரணையாகப் பாடி மகிழ்வித்தாள். அவள் குரலும் கணவனது பியானோ வாத்திய இசையும் அவர்களது இணைந்த வாழ்க்கையைப் போல் இசைந்து ஒலித்தன.

சிறிய ஸ்வீடிஷ் நைட்டிங்கேல் தனது இறக்கைகளை மடக்கிக் கொண்டு ஓய்வு பெற வேண்டிய வேளை நெருங்கிய போதும் அவள் பாடினாள். கணவரைப் பார்த்துத் திருப்தியுடன் முகம் மலர அவரது கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டு தனது கடைசி இசையை இனிமையாக அற்புதமாகப் பாடினாள். பாடிக் கொண்டிருக்கும் போதே அவள் மூச்சு நின்றது. குயிலின் இனிய ஓசை ஓய்ந்தது!

இங்கே நிற்கிற பசு மாட்டுக்கும் அதற்கு முன்னால் வைத்திருக்கிற குண்டுகளுக்கும் என்ன தொடர்பு?

சில மாதங்களுக்கு முன்னால் இந்த மாடு வீக்கங்களுடன் சென்னை சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டது. அங்கு ஆபரேஷன் செய்து பார்த்தபோது அதன் முதல் இரைப் பையில் இந்த ஏழு குண்டுகளும் ஒளிந்து கொண்டிருந்தன. இவற்றின் மொத்த எடை இருபத்திரண்டு கிலோ. அதுசரி, இந்தக் குண்டுகள் வயிற்றுக்குள் எப்படிப் போயின? இந்த மாடு ஒரு 'பார்பர் ஷாப்' அருகில் இருந்த குப்பைத் தொட்டியிலுள்ள குப்பைகளைத் தின்னும்போது அத்துடன் சேர்ந்து உள்ளே போன குழல் கற்றைகளும் சேர்ந்து மாட்டின் வயிற்றில் ஏழு உருண்டைகளாக உருக் கொண்டன. இத்தனை உருண்டைகளை வயிற்றில் வைத்துக் கொண்டு ஜீரணமும் செய்ய முடியாமல் வெளியேயும் துப்ப முடியாமல் அந்த மாடு எத்தனை சிரமப்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். இதுபோல் இன்னும் எத்தனை ஜீவன்கள் அவதிப்படுகின்றனவோ! இந்தவாயில்லா ஜீவன்களை உத்தேசித்தாவது நாம் சூழ்நிலையைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் இல்லையா?

ஆதாரம்: 'அனிமல் ஸிடிஸன்'



பொன்னைவிட உயர்ந்தது?




'பொன்னை விடவே உயர்ந்தது
என்ன என்ற கேள்வியை,
சின்ன வயதில் காந்தியும்
தேர்வுத் தாளில் கண்டனர்.

'பொன்னை விடவே உயர்ந்தது
உண்மை, உண்மை, உண்மைதான்'
என்று காந்தி பதிலுமே
எழுதி னாரே, மகிழ்வுடன்.

சின்ன வயதில் உண்மையின்
சிறப்பை உணர்ந்த காந்திதான்
பின்னர் உலகில் மிகமிகப்
பெரிய மனித ராயினர்!

— அழ. வள்ளியப்பா



பையனின் ஏக்கம்

மிட்டாய் வண்டி, மிட்டாய் வண்டி
மெள்ள வருகுது — அங்கே
தட்டு நிறைய வண்ண மிட்டாய்
தினுசாய் இருக்குது!

காசு உள்ள சிறுவ ரெல்லாம்
கையில் வாங்குறார் — அவர்
வீசி நிமிர்ந்து நடந்து கொண்டே
வாயில் போடுறார்!

நெய்யில் சுட்ட மிட்டாய் வகையோ
நிரம்ப இருக்குது! — சட்டைப்
பையில் துட்டு இல்லா மல்தான்
பார்த்து நிற்கிறேன்!

— அழகு பழனிச்சாமி

வேண்டும்!



அன்பில் சிறந்திட வேண்டும் — பெற்ற
அன்னை சொல் கேட்டிட வேண்டும்!
இன்முகம் காட்டிட வேண்டும் — யார்க்கும்
இனியவைக் கூறிட வேண்டும்!
நன்றி நினைத்திட வேண்டும் — நல்லோர்
நட்பை வளர்த்திட வேண்டும்!
நன்மைகள் செய்திட வேண்டும் — சுய
நலத்தை மறுத்திட வேண்டும்!

கண்ணியம் காத்திட வேண்டும் — ஊக்கம்
கல்வியில் காட்டிட வேண்டும்!
பண்பை ஓம்பிட வேண்டும் — இறைவன்
பாதம் பணிந்திட வேண்டும்!
தொண்டுகள் செய்திட வேண்டும் — பிறர்
துன்பம் துடைத்திட வேண்டும்!
உண்மைகள் பேசிட வேண்டும் — தூய
உள்ளம் பெற்றிட வேண்டும்!

— குளித்தலைக் கூத்தன்



பெருமையும் இழக்கும்

• பூதலூர் முத்து •

சுறுசுறுப்பாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. செல்வம் பிள்ளை மளிகைக் கடையில். அந்த ஊருக்கு மளிகைக் கடையும் அதுதான்; ஜெனரல் ஸ்டோரும் அதுதான்.

கடைப் பையன்களோடு சேர்ந்து கொண்டு செல்வம் பிள்ளையும் பொட்டலங்களை மடித்து வாடிக்கையாளரிடம் கொடுத்துக் கொண்டிருந்தார். 'கொசுறு' கேட்கிற பாட்டிமார்கள் முதல் வெல்லத் துண்டு கேட்கிற சின்னக் குழந்தைகள் வரை எல்லோரையும் அன்போடு சமாளித்துக் கொண்டு கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தார் அவர்.

தன்னை எதிர்பார்த்து நாலைந்து புத்தகங்களுடன் கடையோரமாக நின்றிருந்த அந்தப் பையனை அவர் கண்கள் காணத் தவறவில்லை.

'பள்ளிக்கூட நேரம்: நிற்பவன் மாணவன். என்ன தேவையோ? அவனை அதிக நேரம் காக்க வைக்கக் கூடாது' என்று எண்ணிய அவர் அவனிடம் வந்தார். அவனுக்கருகே பலகையில் உட்கார்ந்து கொண்டார்.

''என்ன தம்பி வேணும்?''

''ஐயா, இந்தப் புத்தகங்களை எடைக்கு எடுத்துக் கொண்டு காசு கொடுங்கள்...''

பையன் கொடுத்த புத்தகங்களை வாங்கிப் புரட்டிப் பார்த்தார்.

''என்னப்பா தம்பி... இதெல்லாம் படிக்கிற பாடப் புத்தகங்களாச்சே... ஏன் விலைக்குப் போடுறே?''

இதே மாதிரி புதுப் புத்தகம் எங்க மாமா வாங்கி வந்து கொடுத்தாரு. அதனாலே இதெல்லாம் எனக்குத் தேவைப்படலே... இங்கே கொண்டு வந்தேன்''.

பையன் கொண்டு வந்தவை அப்படியொன்றும் மிகப் பழையனவாகத் தெரியவில்லை. அவருக்கு. இருப்பினும் பொறுமையோடு அவனிடம் பேசினார்.

''அப்படியா....? இதை மற்ற பையன்கள் பாதி விலைக்கு வாங்கிக்க மாட்டாங்களா? அங்கே கொடுத்தா, உனக்குலாபம் இருக்குமே. இங்கே பழைய பேப்பர் போல எடைக்குப் போட்டால் நஷ்டமாச்சே தம்பி...!''

''ஐயா, யாரும் வாங்கிக்க மாட்டேங்கறாங்க. காரணம் உள்ளே நிறைய தாள் கிழிஞ்சு போயிடுச்சு.''

''ஓகோ...அதுதான் காரணமா?'' என்றவர் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தார்.

''இருபதாம் பக்கம், நாற்பதாம் பக்கம், அறுபதாம் பக்கம், எண்பதாம் பக்கம், நூறாம் பக்கம்...இந்த எண்



கொண்டைச் சேவல் ரெண்டு
சிண்டைப் பிச்சிக் கிண்டு
சண்டைப் போடலாமா? உமக்கு
இண்டி யாகலாமா?

வண்ணப்படம்: புஷ்பத்துறை சுப்ரமணியம்



னுள்ள தாள்களெல்லாம் இல்லையே... நீ சொல்றதும் சரிதான்!'' என்றார்.

ஒவ்வொரு இருபது பக்கத்திற்கும் ஒரு தாள் இல்லை'' என்று எண்ணியவருக்கு உடனே எதுவோ நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

''தம்பீ, இதெல்லாம் உன்னோட புஸ்தகங்கள்தானே? வேறே யாரோட புஸ்தகமும் இல்லையே? நாளைக்கு எந்த விவகாரமும் வராதே?'' என்று கேட்டார் செல்லம் பிள்ளை.

''அதெல்லாம் என்னோட புத்தகங்கள்தான். எடுத்துக்கிட்டு நீங்க சீக்கிரம் காசைக் கொடுங்க'' என்றான் பையன்.

''ஏன் தம்பி அவ்வளவு அவசரம்? பள்ளிக்கூடத்துக்கு நேரம் ஆயிடுச்சா?

''ஆமா, நேரமாயிடுச்சு.''

''தம்பி... சீக்கிரமாப் போயிடலாம். நான் கேட்கிறதுக்கு மட்டும் பொறுப் போட பதில் சொல்லணும். பள்ளிக் கூடத்துப் பிள்ளைங்க முதல்லே பொய் சொல்லக் கூடாது. படிச்சவங்களுக்கும் மத்தவங்களுக்கும் அப்புறம் என்ன வித்தியாசம்? நீ பொய் சொல்றதோடு மட்டுமல்லாமல் வேறு ஒரு காரியமும் செஞ்சிருக்கே....''

''இதை என்ன திருட்டுப் புத்தகம்னு சொல்றீங்களா?''

''நான் அப்படி அவசரப்பட்டு உன் மேலே திருட்டுப் பட்டம் கட்டுவேனா தம்பி... அது தப்பில்லையா? எதற்கும் அந்தப் பையனைக் கூப்பிட்டுக் கேட்போம்...''

''எந்தப் பையனை?''

''இந்தப் புத்தகங்களுக்குச் சொந்தக்காரனை....''

பையனின் முகம் ஒரு மாதிரியாக மாறியது.

''என்னை என்ன செய்யச் சொல்றீங்க இப்போ?'' என்றான் பையன்.

''இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல்லே.... அந்தப் பையன் நல்லாப் படிக்கிற பையன். அதோட அவன் ரொம்பவும் ஏழை. மறுபடி அவனால் புத்தகம் வாங்க முடியாது. இதை உணர்ந்து நீ உண்மையைச் சொன்னா உனக்கும் நன்மை, அவனுக்கும் புத்தகம் கிடைக்கும்.''

பையன் மசியவில்லை.

''தம்பி, இது செந்தில் என்கிற பையனுடைய புத்தகம்தானே?''

தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு.

'கடைக்காரருக்கு எப்படித் தெரியும், அது செந்திலுடைய புத்தகம் என்று?'

''செந்தில் நல்லாப் படிக்கிற பையன். ஆனா ரொம்ப ஏழை. புத்தகம் வாங்க முடியாமத் தவிக்கிறான்னு என் மகன் விவேகானந்தன் சொன்னான். அதனாலே நான்தான் அவனுக்குப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்தேன். விவேகானந்தன் செந்திலோட புத்தகத்திலே ஒவ்வொரு இருபது பக்கத்துக்கும் 'செந்தில்'னு எழுதியிருந்தான்.

''நீ கொண்டுவந்த புத்தகங்களில் பெயர் எழுதியிருந்த அந்தத் தாள்களை மட்டும் காணோம். அதுமட்டுமில்லாமே செந்தில் போன வாரம் என்கிட்ட வந்து 'ஐயா நீங்க வாங்கிக் கொடுத்த புத்தகம் காணமல் போயிடுச்சு. ரொம்பக் கஷ்டமாயிருக்கு'. அப்படீன்னு சொன்னான்... தம்பீ.. இப்பவாவது சொல்லு... உண்மையை.''

''ஐயா... என்னை மன்னிச்சுடுங்க... இதெல்லாம் செந்திலோட புத்தகங்களே தான். அவன் மேலே உள்ள பொறுமையாலே இந்தத் தவறு செஞ்சுட்டேன்'' என்றான்.

''தம்பி... செந்தில் நல்லாப் படிக்கிறதினாலே யாருக்கு என்ன நஷ்டம்? உன்னோட வகுப்புப் பையன் நல்லாப் படிச்சா உங்க வகுப்புக்குப் பெருமை... பள்ளிக்குப் பெருமை...

''நீ இப்படித் தவறு செய்தா உனக்கு இழுக்கு... உன்னோட வகுப்புக்கு, பள்ளிக்கு... அது மட்டுமா? உன்னோட பெற்றோருக்கு இழுக்கு, இல்லையா? இனிமேல் இந்த மாதிரி செய்யாதே!''

செல்லம் பிள்ளை அவன் கையில் ஐம்பது பைசாக் காசைக் கொடுத்தார்.

அவன் மறுத்தான்.

அவர் மறுபடியும் அவன் கையில் அன்போடு கொடுத்தார். அவன் அந்தக் காசைத் திருப்பிப் பார்த்தான். அதில் பிறருக்கு எப்போதும் நன்மையே செய்த காந்திஜியின் உருவம் சிரித்துக் கொண்டிருந்தது.

பாட்டி சைக்கிள் வாங்கித் தருவாள்!

எஸ். தியாமளா

"பாட்டீ.... பாட்டீ...."

கால்கள் பூமியில் பதியாமல் துள்ளலுடன் ஓடி வந்த பேரன் பூர்ணுவைப் பாசம் பொங்க நிமிர்ந்து பார்த்தாள் பாக்கியம். கிழிந்த புடவைக்கு ஒட்டு போட்டுத் தைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

''பாட்டீ! இந்த அரை பரீட்சையில் நான் நிறைய மார்க் வாங்கி இருக்கிறேன். ஆமாம், பெரிய பரீட்சையில் முதல் 'ரா'ங்க்' வந்துடுவேன். நிச்சய்மா நீ சைக்கிள் வாங்கித் தரணும். ஏமாற்றமாட்டியே.'' புத்தகப் பையை ஆணியில் மாட்டிவிட்டுப் பாட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டான் பூர்ணு.

''ஏமாத்தமாட்டேண்டா;. கண்ணு !'' நிச்சயமா வாங்கித் தருவேன். நீ 'பஸ்டில்' வரணும்.' அப்பத்தான் வாங்குவேன். தெரிஞ்சுதா ?''

''ஓ... நிச்சயமா பஸ்டில் பாஸ் பண்ணுவேன். ஜோரான சைக்கிளில் அடுத்த வருஷம் ஸ்கூலுக்குப் போவேனே!'' ராகம் இழுத்தபடி பாட்டியின் சுருங்கிய கன்னத்தில் முத்தமிட்டான், சிறுவன் பூர்ணு.

பாக்கியமும் சந்தோஷத்தில் கண்களில் நீர் தேங்கச் சிறுவனை அணைத்து முத்தமிட்டாள்.


''சரிடா ராஜா! நீ போய் கை கால் கழுவிக் கொண்டு வா.... தோசையும் சட்னியும் வைத்திருக்கிறேன்'' என்றாள்.

பூரண சந்திரனும் குதூகலத்துடன் குதித்தபடி கிணற்றங் கரைக்கு ஓடினான். சைக்கிள் விடுவது போல் கைகளையும் கால்களையும் ஆட்டிக் கொண்டே செல்லும் சிறுவனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் பாக்கியம்.

இரண்டு வருஷங்களுக்குமுன் பூர்ணுவின் பெற்றோர் அம்மை நோயில் இறந்துவிட்டனர். பாக்கியம்தான் ஒரே ஆதரவு. மகனையும் மருமகளையும் இழந்து தள்ளாத வயதில் குழந்தையை வளர்க்கும் சுமையையும் ஏற்றுக் கொண்டு அவனைக் கண்களில் வைத்து இமையால் மூடி வளர்த்து வந்தாள். பூர்ணு நல்ல பையன்தான். சுறுசுறுப்பும் கெட்டிக்காரத்தனமும் உள்ளவன் தான். ஆனால் விவரம் புரியாத சின்ன வயதில் தந்தையின் கண்டிப்பு இல்லாத குறை அவனைத் துஷ்டனுக்கியது. பாட்டியின் கண்களைப் பாசம் மறைத்தது. துஷ்டப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதும் சீட்டாடுவதும் சினிமாவுக்குப் போவதுமாக இருந்தான். அதன் விளைவு பரீட்சையில் மட்டம் போட நேர்ந்தது.

பாக்கியம் விழித்துக் கொண்டாள். குழந்தைக்கு நல்ல முறையில் நயமாகப் போதனை செய்தாள். இயற்கையிலேயே தன்மானமும் கௌரவமும் சிறுவனின் ரத்தத்தில் கலந்திருந்ததால் பரீட்சையில் தோல்வி அடைந்த போது மிகவும் கலங்கிவிட்டான். பாட்டியிடம் அழுது மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

''பாட்டீ! கோபிச்சுக்காதே, பாட்டீ, நான் இனிமே அந்தப் பையன்களோடு சேர மாட்டேன். நன்றாகப்



படிப்பேன். முதல் ராங்கில் வருவேன்'' என்றான் அழுதுக் கொண்டே.

பாட்டி சிறுவனின் உள்ளத்தைப் புரிந்து கொண்டாள். பாசமுடன் தடவிக் கொடுத்தாள்.

''பூர்ணு, கண்ணு ! உன் அப்பா உன்னைப் பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்க ஆசைப்பட்டான். நீ நன்றாகப் படித்துப் பெரிய ஆபீசராக ஆனால் அவன் ஆத்மா சாந்தி அடையுமடா. நான் கிழவி. என் உடலில் சக்தி இருக்கும் வரைதான் உன்னைக் கவனிக்க முடியும். நீ புத்திசாலியாச்சே. நீயாக உன்னோட நிலையைப் புரிந்து கொள்ள வேண்டாமா? நமக்குப் பணம் இல்லே. படித்தால்தான் பணம் சம்பாதிக்க முடியும்......'' என்றாள். சிறுவனும் பாட்டியின் புத்திமதியை ஏற்றுக் கொண்டான்.

''பாட்டி! ரவியோட அப்பா அவனுக்குச் சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்கிறார் பாட்டி. ரொம்ப ஜோராக இருக்கு'' என்று கூறிக் கொண்டே வந்தான் ஒரு நாள் பூர்ணு. சிறுவனின் கண்களில் பரவிய ஆசையைப் பாக்கியம் உணர்ந்து கொண்டாள்.

''அதுக்கென்ன.... இந்த வருஷம் நீ பஸ்ட் கிளாஸிலே பாஸ் பண்ணு.... நான் உனக்கும் சைக்கிள் வாங்கித் தருகிறேன்......''

''நிஜம்மாவா பாட்டி!'' கூவினான் பூர்ணு.

''நிச்சயமா வாங்கித் தருவேன். நீ பஸ்ட் கிளாஸிலே பாஸ் பண்ணணும்.'' பாக்கியம் உறுதி அளித்தாள்.

''சரி, பாட்டி! நிச்சயமா நான் பஸ்டிலே பாஸ் பண்ணுவேன். நீ ஏமாற்றக் கூடாது.''

''இல்லே... இல்லே.... ஏமாற்றவே மாட்டேண்டா.....'' என்றாள் பாக்கியம்.

சவாலை ஏற்றுக் கொண்ட பூர்ணு ஒழுங்காகப் படிக்கலானான். துஷ்டப் பிள்ளைகளிடமிருந்து ஒதுங்கி நல்லவர்களோடு சேர்ந்தான். பள்ளிக்கூடத்தில் பழையபடிஉபாத்தியாயர்கள் அவனைக் கொண்டாடினார்கள். பாக்கியமும் பரவசமடைந்தாள்.

கால் பரீட்சையில் பூர்ணு வகுப்பில் மூன்றாவதாக வந்தான். சிறுவனின் முயற்சியையும் ஊக்கத்தையும் கண்டு பாட்டி மகிழ்ந்தாள். அரைப் பரீட்சையில் இரண்டாவதாகத் தேறி இருந்தான். அப்போது பாக்கியம் மகிழ்ச்சியோடுகூட சிறிது கவலையும் அடைந்தாள்.

பாட்டியும் பேரனும் சவால் விட்டார்கள். பேரன் ஜெயித்துவிட்டால் பாக்கியம் சைக்கிள் வாங்கிக் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் சிறுவனின் உள்ளம் ஏமாற்றம் அடையும். வெறுப்பு ஏற்பட்டுத் திரும்ப துஷ்டனாகி விடுவானோ? பாட்டிக்குப் பயம் ஏற்பட்டது.

பூர்ணுவின் தந்தை இறந்தபோது ஆதரவற்ற குடும்பம் என்று அவர் வேலை செய்து வந்த தொழிற்சாலை அதிபர் பாக்கியத்துக்கு அங்கு ஒரு குடியிருக்க குவார்டர்சும் கொடுத்தார்கள். சம்பளத்தில் அந்த இரண்டு பேருக்கும் உணவுக்கும் உடைக்கும் போகக் கொஞ்சம் சேமித்து வைத்தாள். ஆனால் விலைவாசியின் உயர்வில் அதுவும் கரைந்துவிடும். இடை இடையே உடம்புக்கு நோய் வந்து டாக்டரிடம் காட்டி மருந்துகளாகக் கரைந்துவிடும்.

சைக்கிள் வாங்கக் குறைந்தது ஐந்நூறு ரூபாயாவது வேண்டுமே. பாக்கியம் சிறுவனுக்கு உறுதி கூறிய தினத்திலிருந்து வெகு சிக்கனமாகக் குடும்பம் நடத்திச் சேமிக்கத் தொடங்கினாள். செலவை எத்தனை கட்டிப் பிடித்தாலும் சேமிப்பில் இரண்டு நூறு ரூபாய்க்கு மேல் எட்டவில்லை. அதனால் தான் பாக்கியம் அடிக்கடி பெருமூச்சு விட்டாள்.

அன்று மாலை பாக்கியம் தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தவள் அம்மன் கோயில் மண்டபத்தருகில் சில நிமிஷங்கள் களைப்பாற உட்கார்ந்தாள். இருட்டும் நேரம். மண்டபத்துள் பேச்சுக் குரல் கேட்டது

''என்னடா, பூர்ணு ! இந்த வார டெஸ்டிலே மார்க் குறைந்துவிட்டதே. ஏண்டா, பெரிய பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதம்தான் இருக்கு. நன்றாகப் படிக்க வேண்டாமா ?''

ஆசிரியர் நாராயணசாமியின் குரல் தான் அது. பாக்கியம் திகைப்பும் தவிப்புமாகத் தூண் மறைவில் ஒதுங்கிக் கொண்டாள். அவன் பேரன் டெஸ்டில் மார்க் குறைந்துவிட்டதா? ஏன்? கிழவியின் மனம் பதைத்தது.

''படிக்கிறேன், சார். பாஸ் பண்ணி விடுவேன் சார் !'' பூரண சந்தரன் தயங்கித் தயங்கிக் கூறினான்.

''என்னடா பூர்ணு! ஏதோ பாஸ் பண்ணிடுவேன் என்றாயே.... பஸ்ட் ராங்கில் வரவேண்டாமோ அரைப் பரீட்சையில் செகண்டா வந்திருக்கிறாய். இப்ப ஏன் இப்படி....? அது சரி... பஸ்டில் பாஸ் பண்ணினால்தானே

உனக்குப் பாட்டி சைக்கிள் வாங்கித் தருவாள்'' ஆசிரியர் வினவினார்.

''ஏண்டா, பேசாமல் இருக்கிறாய்? பழையபடி அந்தச் சோம்பேறிப் பையன்களோடு சேர்ந்து விட்டாயா என்ன.....?''

''இல்லே சார், இல்லே. எனக்கு சைக்கிள் வேண்டாம். சார். சைக்கிள் வேண்டாம்... பாட்டி... பாட்டி... இருந்தால்..... போதும்.....'' விம்மினான் சிறுவன். பாக்கியத்தின் உடல் தள்ளாடியது. தூணை கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

'' என்னடா.... பூர்ணா... என்ன என்ன? ஏன் அழறே? பாட்டிக்கு என்ன?'' ஆசிரியர் அன்பும் பரிவுமாக வினவினார்.

''சார்! சைக்கிள் வாங்கித் தரப் பாட்டி ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறாளாம். யார் யார் வீட்டிலோ மாவு அரைக்கிறாள். தண்ணி மொண்டு வந்து கொடுக்கிறாள். துணி துவைக்கிறாள். காந்தாமணி அம்மா சொன்னாங்க. பாட்டி இன்னும் என்ன வேலையெல்லமோ செய்யறாங்களாம். நான் பஸ்டில் வந்தால்தானே சைக்கிள் வாங்க வேண்டும்? சாதாரணமாக பாஸ் பண்ணினால் பாட்டி இப்படிக் கஷ்டப்பட வேண்டாமே. வீட்டிலும் வயிற்றுக்குச் சரியாகச் சாப்பிடாமல் பணம் சேர்க்கிறாள். தள்ளாத வயதில் இப்படிக் கஷ்டப்பட்டால் பாட்டிக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிடாதா. சார்! எனக்கு அப்பா அம்மாதான் இல்லே. பாட்டியாவது இருக்க வேண்டுமே.... பாட்டி.... பாட்டி இல்லாவிட்டால்.....'' மேலே சொல்ல முடியாமல் நெஞ்சை அடைக்க 'ஹோ' என்று அழுதான் பூர்ண சந்திரன்.

''பூர்ணா, பூர்ணா, என் கண்ணே...'' அலறின பாக்கியம் மயங்கிச் சாய்ந்தாள்.

பூர்ணாவும் ஆசிரியரும் ஓடி வந்தனர். பாட்டியை அங்கு கண்டு அதிர்ச்சி அடைந்து பூர்ணா அழலானான். ஆசிரியர் அவனைத் தேற்றிப் பாக்கியத்தையும் மயக்கம் தெளிய வைத்தார். கண்களை விழித்த பாக்கியம் பேரனைப் பாசம் பொங்க அணைத்துக் கொண்டாள்.

''பாட்டீ..... பாட்டீ.....''

பூர்ணா விம்மலுடன் பாட்டியின் அணைப்பில் ஒடுங்கினான். மெய்ம் மறந்து ரசித்துக் கொண்டிருந்த நாராயணசாமியின் விழிகளிலிருந்து நீர் வடிந்தது.

எதையும் தியாகம் செய்யத் தூண்டும் பாசத்தின் சக்தியைக் கண்டு ஆசிரியர் வியந்தார்.

மாய மோதிரம்

வாண்டுமாமா



குயுக்தியால் குண்டோதரனை வெற்றி கொண்ட பராக்கிரமரும் சக்ருக்னனும் அவனிடமிருந்து பறித்துக் கொண்ட மாயத் தங்கத்தினாலாகிய மோதிரத்தையும் கிரீடத்தையும் எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள். குட்டிச்சாத்தானை குண்டோதரனை வெற்றி கொண்டாலும் பராக்கிரமருக்கு உவகை இல்லை, போர்க் களங்களிலே கிட்டும் வெற்றியிலே ஏற்படும் மகிழ்ச்சி இல்லை. மன நிறைவுமில்லை. வீரரான அவருக்குத் தான் குண்டோதரனை இப்படி ஏமாற்றி அவன் உடைமையை அபகரித்துக் கொண்டது என்னவோ போலிருந்தது. தமது வீரத்துக்கு அதை ஓர் இழுக்காகவே கூடக் கருதினார். ஆனால் அருமைத் தங்கை பிரியாவை விடுவிக்கவும், தாய் நாட்டின் மீது சீதளனும் பிங்களனும் ஏவிவிட்டிருந்த பயங்கரமான பனி மூட்டத்தை விடுவிக்கவுமே அவர் இத்தகைய விருப்பமற்ற செயலில் ஈடுபட வேண்டி இருந்தது. தவிர வீரத்தினால் மட்டும் சாதிக்கக் கூடிய காரியமல்லவே அது. ஆகவே மனத்தை ஒரு நிலையில் சமாதானப்படுத்திக் கொண்டார் பராக்கிரமர்.

குண்டோதரனைத் தேடி அலைந்து வெகு தூரம் வந்திருந்தார்கள். அவனைக் காணும் ஆவலிலும் ஆர்வத்திலும் கடந்து வந்த பாதைகளின் கஷ்டங்களும் துன்பங்களும் அப்போது பெரிதாகத் தெரியவில்லை. இரும்பும் இந்த நிலையில் வெற்றி கிட்டியிருந்தாலும், தேடி வந்த பொருள்கள் கிடைத்து விட்டாலும் கூடப் பிரயாணத்தின் கஷ்டங்கள் தெரியலாயின. அது மட்டுமல்ல. அந்தச் சகோதரர்களின் உள்ளத்திலே இப்போது புதிய கவலையொன்று மூளை விட்டுக் கொண்டிருந்தது. 'மாயத் தோற்றமும் மந்திரத் தன்மைகளையும் கொண்ட சீதளனும் பிங்களனும் தங்கள் வார்த்தையைக் காப்பாற்ற வேண்டுமே. தங்க நதியின் சொக்கத் தங்கத்தினாலான கிரீடத்தையும் மோதிரத்தையும் பெற்றுக் கொண்டு அன்புத் தங்கை பிரியாவைத் தங்களிடம் திரும்ப ஒப்புவிக்க வேண்டுமே' என்ற கவலையே இப்போது அவ்விருவரின் இதயத்தையும் கனக்க வைத்திருந்தது.

அந்த மோதிரம், கிரீடம் ஆகியவற்றின் அபூர்வ சக்தியைக் கண்ணெதிரே பார்த்திருந்தாலும் ஏனோ அந்த மந்திரப் பொருள்களிடம் அவர்கள் மனம் ஈடுபடவில்லை. அதை ஒரு சுமையாகக் கருதினார்கள். தங்கள் பொறுப்பிலிருந்து அவை போனால் போதும் என்றே எண்ணினார்கள். ஒருவேளை குண்டோதரன் அந்தப் பொருள்களுக்குள்ள சாபத்தைப் பற்றி எச்சரித்ததினால் இத்தகைய மனப் போக்கு ஏற்பட்டதோ!

குண்டோதரனைத் தேடியலைந்ததைப் போலவே இப்போது சீதளனையும் பிங்களனையும் தேடிப் போனார்கள். ஆனால் அந்தக் குள்ளன் இருக்குமிடம் தெரியாத நிலையில் தேடி அலைந்தார்கள். ஆனால் இந்த ராட்சதர்கள் இருக்குமிடம் ஓரளவு பராக்கிரமருக்குத் தெரியும். வடக்கே, இமய மலையின் அடிவாரத்திலே பனி மூடிய மலைப் பிரதேசத்தில் அவர்கள் இருக்க வேண்டும். பனியும் குளிரும்தானே அவ்விருவரின் பலம்!

5



கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரே வெண்மை, வெண்மை. பால் நுரையின் பளீர் வெண்மை எங்கும் பரவிக் கிடந்தது. பஞ்சுப் பொதிகளாகப் பனி உறைந்து கிடந்தது எங்கும். பனிப் பிரதேசத்துக் காடுகள் ஆங்காங்கே தலை நிமிர்ந்து நின்றாலும் அவைகளின் மீது பனிக் கட்டித் தூள் படிந்து அவைகளைத் தலை குனிய வைத்திருந்தது. நெடிதுயர்ந்த மலைகள். அவைகளின் உடலிலும் பனி ஓடி உறைந்திருந்தது.

கால் புதையப் புதையப் பராக்கிரமரும் சத்ருக்னனும் நடந்தார்கள். பரந்த பனி மூடிய சமவெளிகளில் நின்று 'சீதளா, பிங்களா!' என்று குரல் எழுப்பிக் கூப்பிட்டார்கள். இவர்களது குரல் மலைகளிலேமோதி ''சீதளா...ளா...ளா...! பிங்களா...ளா...ளா...!'' என்று எதிரொலித்தது. அமைதியும் மோனமும் நிறைந்த அந்தப் பிரதேசத்தில் இவர்களின் எதிரொலிக் குரல் அச்சமூட்டுவதாக இருந்தது. எதிரொலியின் அதிர்விலே பனிப்பாறைகள் சரிந்து பேரிரைச்சலுடன் விழுந்து வெண் புகையை உருவாக்கின.

அப்படி ஏற்பட்ட ஒரு வெண் புகையிலே இரண்டு பூதாகாரமான உருவங்கள் தோன்றின. அது சீதளனும் பிங்களனும்தான். ''பராக்கிரமரே! சொக்கத் தங்கத்தினாலான மந்திரப் பொருள்களைக் கொண்டு வந்து விட்டீர்களா?'' என்று கேட்டான் சீதளன் தனது இடிபோன்ற குரலில்.

''கொண்டு வந்திருக்கிறோம். எங்கள் சகோதரி பிரியாவை எங்களுக்கு அளித்துவிட்டு, அவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்'' என்றான் சத்ருக்னன்.

''எங்கே, அந்த மோதிரத்தையும், கிரீடத்தையும் காட்டுங்கள் பார்க்கலாம்.''

பராக்கிரமர் அவ்விரு பொருள்களையும் தம் இரு கைகளிலும் ஏந்தித் தலைக்கு மேலே உயர்த்திக் காட்டினார். அதிலிருந்து கிளம்பிய ஒளி அந்தப் பிராந்தியத்தையே பொன் மயமாக்கியது. அதன் ஜ்வலிப்பு ராட்சதர்களாகிய அவ்விருவர் கண்களையுமே கூசச் செய்தது. சில விநாடிகள் அங்கு அமைதி நிலவியது. யாருமே பேசவில்லை. அந்த மௌனம் அடுத்து வரப் போகும் பயங்கரமானதொரு போராட்டத்தின் முன் அறிவிப்புப் போலிருந்தது.

திடீரென்று சீதளனின் குரல் சீறி வெடித்தது. ''அந்த மோதிரம் எனக்கு, கிரீடத்தை நீ வைத்துக்கொள்.''

வெறிச் சிரிப்பொலி வெடித்துச் சிதறியது பிங்களனிடமிருந்து. ''கிரீடத்தை யார் சுமந்து கொண்டிருப்பது? மோதிரம்தான் எனக்கு வேணும். மகுடத்தை நீ மாட்டிக்கொள்.''

''மோதிரம் எனக்குத்தான்...''

''எனக்கு வேண்டாம் அந்தப் பொன் முடி...'' இருவருக்குமிடையே வாக்குவாதம் முற்றியது. வாய்ச் சண்டை கைகலப்பிலே முடிந்தது. இருவரும் ஒரு பெரிய மரத்தின் முறுக்கிக் கிடந்த வேரைப் பிடுங்கிக் கொண்டார்கள். ஒற்றுமையின் உருவமாக இருந்த சீதளனும் பிங்களனும் பரம விரோதிகளானார்கள். அந்தத் தங்கப் பொருளின் ஒளியே அவர்களிடை விரோதத்தை வளர்க்குமானால் அந்தப் பொருளே அவர்களிடம் இருக்கும்போது எத்தகைய விபரீதங்களை விளைவிக்குமோ?

சீதளனும் பிங்களனும் ஒருவரை ஒருவர் பயங்கரமாகத் தாக்கிக் கொண்டார்கள். காட்டு மரத்தின் வேர் கதாயுதத்தையும் விடக் கெட்டியாகச் செயல் பட்டது. 'மடேர்' 'மடேர்' என்று சாத்தினார்கள். மகத்தான பலங்



கொண்டவர்கள் இருவரும். யாரும் சளைக்கவில்லை. மந்திரத் தங்கம் தன் வஞ்சத்தைக் காட்டியது. அரக்கர்கள் இருவரும் கோரமாகப் போரிடுவதைக் கண்டு சிலையாகச் செய்வதறியாது நின்றார்கள் பராக்கிரமரும் சத்ருக்னனும். மாய மோதிரத்தின் கொடிய குணங்களைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருந்தார்கள். இப்போது இவ்விரு பொருளும் தம்மிடம் இருப்பதையே வெறுத்தார் பராக்கிரமர்.

இதற்குள் அடித்துக் கொண்ட அரக்கர்களின் போரும் ஒரு முடிவுக்கு வந்தது. சீதளன் தன் வேர்க் கட்டையினால் பிங்களனை மூர்க்காவேசமாகத் தாக்கிக் கீழே சாய்த்தான். மலை சரிந்தது போலக் கீழே விழுந்த பிங்களன் மறுபடியும் எழுந்திருக்கவில்லை. சீதளனின் உடலெல்லாம் ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. அந்த நிலையிலும் அவன் இடி இடியென்று சிரித்தான்.

''ஒழிந்தான் பயல்! இரண்டுமே என்னுடையவையாயிற்று. தங்கக் கிரீடத்தையும் மோதிரத்தையும் இப்படிக் கொடுங்கள்'' என்று தன் ரத்தம் தோய்ந்த கரங்களை நீட்டினான் சீதளன்.

''எங்கள் சகோதரி பிரியா..?'' என்றார் பராக்கிரமர் தமது உலர்ந்த குரலில்.

''பணயப் பொருள் கிடைத்த பிறகு பாவை எனக்குத் தேவையில்லை. என் தேவைகளை இனி அந்த மோதிரம் தீர்த்து வைக்கும். இதோ உங்கள் பிரியா'' என்று தனது வலது கையை விரித்தான் சீதளன். விரிந்த அவனது உள்ளங்கையில் ஒயிலாக நின்று கொண்டிருந்தாள் அழகி பிரியா. சீதளனின் இடது கை நீண்டது. அதிலே மாய மோதிரத்தையும் கிரீடத்தையும் வைத்தான் சத்ருக்னன். பராக்கிரமர் தம் இரு கைகளை நீட்டிப் பிரியாவை ஏற்று அணைத்துக் கொண்டார்.

ரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கும் தன் சகோதரனை ஏறெடுத்தும் பாராமல் சொக்கத் தங்கத்தினாலான கிரீடத்தையும் மோதிரத்தையும் ஆசையோடு அணைத்துத் தழுவிக் கொண்டே, ''இனி என்னை வெல்ல யாராலும் முடியாது. இந்த உலகத்தையே அடிமை கொள்ளும் ஆற்றல் பெற்றவனாகி விட்டேன்!'' என்று கொக்கரித்தபடியே கானகத்தினுள் புகுந்து ஓடினான் சீதளன். அதைத் தொடர்ந்து வரும் விபரீத விளைவுகளைப் பற்றி அவன் அறியவில்லை.

மாய மோதிரமும் கிரீடமும் தங்களை விட்டுப் போனதில் பராக்கிரமருக்கும் சத்ருக்னனுக்கும் மட்டில்லா மகிழ்ச்சி. அருமைத் தங்கை பிரியா தங்களிடம் வந்து சேர்ந்ததில் எல்லையற்ற மகிழ்ச்சி வேறு.

ஊர் திரும்பியவர்களுக்கு இன்னுமோர் ஆனந்தம் காத்திருந்தது. சீதளனும் பிங்களனும் உருவாக்கிக் கொடுத்திருந்த புதிய தலைநகரம் பொலிவுடன் கலகலப்பாகக் காட்சி யளித்துக்கொண்டிருந்தது. மரங்கள் பூத்துக் குலுங்கின. வண்ணப் பறவைகள் இன்னிசை எழுப்பியபடி பறந்து திரிந்தன. நகரைப் போர்த்தியிருந்த சோகமும் விலகிப் போயிருந்தது. பிரியாவுடன் மகிழ்ச்சியும் குதூகலமும் திரும்பி இருந்தன.

ஆனால்....

பராக்கிரமரின் உள்ளத்திலே இனம் தெரியாததொரு வேதனை குடிகொண்டது. அந்த மாய மோதிரத்தை நேர்மையற்ற முறையில் குண்டோதரனிடமிருந்து பறித்ததும் சில நாட்கள் அது



தன் பொறுப்பில் இருந்ததும்தான் அவருடைய கவலைக்குக் காரணம். குண்டோதரன் எச்சரித்தது போல் சீதளன் பிங்களனிடையே கொலை வெறிக் குணம் மேலோங்கி விளைந்த விபரீதத்தைப் போலத் தன் வீட்டையும் நாட்டையும் அந்தத் தங்கத்தின் சாபம் தாக்குமோ என்ற பயம் இதயத்தைக் கடித்துக் கொண்டே இருந்தது. அவரால் அதை மறந்து மகிழ்ச்சியோடிருக்க முடியவில்லை. அதிலிருந்து விடுபட ஒரே வழிதான் இருந்தது. தங்க நதியின் பொன்னை அபகரித்தவர்களுக்கு வரக்கூடிய கேடுகளைக் களைந்து காக்கக்கூடிய ஒரு சக்தியை எப்படியாவது பெற்றாக வேண்டும். இப்படியொரு சாபம் இருக்கும்போது அதிலிருந்து காக்கும் ஒரு சக்தியும் இருக்கத்தானே வேண்டும்?

அமைதியற்ற நிலையில் வாழ்வதை விரும்பாத பராக்கிரமர், தன் நாட்டையும் வீட்டையும் மாயத் தங்கத்தின் சாபத்திலிருந்து காக்கும் சக்தியைத் தேடிக் கிளம்பி விட்டார். சத்ருக்னனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டுக் கிளம்பினார். பராக்கிரமரின் பத்தினி ராணி பத்மினி கண்ணீர் மல்கப் பிரியா விடை கொடுத்தாள். தன்னந் தனியாக, குதிரை கூட இல்லாமல் கிளம்பினார் பராக்கிரமர். மனைவியின் கண்ணீரைத் துடைத்து, ''கவலைப் படாதே. உங்கள் நல்வாழ்வுக்காகத் தான் போகிறேன். விரைவிலேயே, புதிய சக்தியுடன் திரும்பி வருவேன். உன் பிரார்த்தனையும் அன்பும் என்னை எந்த அபாயங்களிலிருந்தும் காப்பாற்றும்'' என்று ஆறுதல் கூறி விடை பெற்றுக் கொண்டார்.

நாட்கள் தேய்ந்தன. மாதங்கள் மலர்ந்தன. ராணி பத்மினி தன் கணவனின் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தாள். பத்தினியாகிய அவள் பக்தியோடு பிரார்த்தனை செய்தாள். 'என் அன்புக் கணவனுக்கு எவ்வித ஆபத்தும் நேரக் கூடாது. விரைவில் திரும்பக் கொண்டு வந்து சேர்த்துவிடு' என்று ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கோட்டை உப்பரிகையின் உச்சியிலே நின்று சூரியபகவானை நோக்கிப் பிரார்த்திப்பாள். பத்மினியின் பிரார்த்தனை வீண் போகவில்லை. மேகங்கள் சூழ்ந்த அதிகாலைப் போதில் வழக்கப்படி அவள் ஆதவனிடம் வேண்டிக் கொண்டிருக்கும் போது வானத்திலே பளிர் என்ற ஓர் ஒளி தோன்றியது. இனிமையான குரலில் அரம்பையர் இசைப்பது காற்றிலே மிதந்து வந்தது. அந்த இசையும் ஒளியும் உடலையும் உள்ளத்தையும் புல்லரிக்கச் செய்தன. பார்த்துக் கொண்டே இருக்கும்போது ஒளிகொண்ட மேகத்திடையே கம்பீரமான இரு குதிரைகள் கனைத்தபடி முன்னங்கால்களைத் தூக்கிப் பாய்ந்து வந்தன. சாதாரணக் குதிரைகளா அவை? இல்லை. நீண்ட இறக்கைகளைக் கொண்ட வானுலகத்துப் பரிகள் அவை. அந்த இரு குதிரைகளின் மீது தேவ மகளிர் இருவர் அமர்ந்திருந்தனர். அந்த இரு குதிரைகளின் மீதும் தம் இரு கால்களையும் ஊன்றியவாறு ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அது யார்? உற்றுப் பார்த்தாள் பத்மினி. ஆனந்தத்தினால் அவள் பார்வைக்குக் கண்ணீர் வலை பின்னியது. அப்படி அந்த இரு தேவலோகத்துக் குதிரைகளின் மீதும் காலூன்றிக் கம்பீரமாக நின்றிருந்தவர் அவளது அன்புக் கணவரான பராக்கிரமரே தான்! பத்மினியின் நிலை எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

தெரியுமா ?



2003. அமெரிக்க மத போதகரும் நோபல் பரிசு பெற்றவருமான ஒருவர் 1968ல் படுகொலை செய்யப்பட்டார். அவர் யார் என்று கூற முடியுமா ?

2004. ஜி. எம். டி. (G. M. T.) என்றால் கிரீன்விச் மீன் டைம் (Greenwich Mean Time) என்று பொருள். அதே மாதிரி பி.எஸ்.டி. (B. S. T.) என்றால் என்ன?

2005. உலகின் எந்தப் பகுதியில் கால்லிப்ஸோ (Calypso) பாடல் பிறந்தது என்று தெரியுமா ?

2006. கிரேக்கர்களின் கடவுளான போஸிடான் (Poseidon) ரோமானியர்கள் எப்படி அழைத்தார்கள் என்று தெரியுமா ?

2007. வட துருவத்தின் அடியில் 1958ம் ஆண்டு பிரயாணம் செய்த அணுவிசையில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பலின் பெயர் என்ன?

2008. புராதன எகிப்தியர்கள் கொக்கு போன்றதொரு பறவையைப் புனிதமாகக் கருதி வழிபட்டார்களாம். அப்பறவையின் பெயர் தெரியுமா ?

2009. புகழ்பெற்ற ராயல் கிரீன்விச் வான் ஆராய்ச்சி நிலையம் (The Royal Greenwich Observatory) கிரீன்விச் என்ற இடத்தில் இல்லை. அப்படியானால் அது எங்குள்ளது ?

2010. நீங்கள் ஒரு கணித ஆராய்ச்சியாளராக இருந்தால் க்ளினோ மீட்டர் (Clinometer) மூலம் எதை அளப்பீர்கள்?

2011. டி.என்.டி. (T.N.T.) என்பது மிகச் சக்தி வாய்ந்த வெடி மருந்து என்று தெரியும், உங்களுக்கு. எந்த வார்த்தைகளின் சுருக்கம் இது ?

2012. ஃபாரன் ஹீட் மானியின் படி தண்ணீரின் கொதி நிலை எவ்வளவு?

2013. பூமியின் மேற்பரப்பில் உள்ள காற்றின் அழுத்தத்தை அளக்கும் கருவிக்கு வாயு மண்டலக் கண்ணாடி (Weather Glass) என்றொரு பெயர் உண்டு. இதன் சரியான பெயர் என்ன?

2014. லெமனேட் என்ற பானம் தயாரிக்கப் பயன்படுகிறது ஒரு வாயு. அது என்ன வாயு தெரியுமா ?

2015. மக்னீஷியம் ஸல்பேட் என்ற ரசாயன உப்பை அநேகமாகப் பல வீடுகளில் வைத்திருப்பார்கள். இதன் நடைமுறைப் பெயர் என்ன ?

2016. உலகிலே மிக நீளமான அலை தாங்கி (Pier) அது ஓர் உல்லாசப் பொழுது போக்குமிடமாகவும் கூட இருக்க வேண்டும். எங்குள்ளது ?

2017. பிரிட்டிஷ் ராஜ வமிசத்தின் நகைகளை 1671ல் திருடிச் செல்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. இதைச் செய்தது யார் ?

2018. ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் எனப்படும் இங்கிலாந்து நாட்டின் பொதுச் சபைக்கு முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணி யார்?

2019. விண்ட்ஸரின் விதவை(Widow of Windsor) என்று பிரிட்டிஷார் யாரைக் குறிப்பிடுவார்கள் ?

2020. கடல் நீரின் உறை நிலை எது?


2021. ஒரு வாயுவின் கன பரிமாணம், அதன் உஷ்ண நிலை ஒரே நிலையில் இருக்கும்போது, அதன் மீது செலுத்தும் அழுத்தத்துக்கு ஏற்ப எதிர் நிலையில் மாறுபடக் கூடியது என்ற இந்த விதியைத் தெளிவாக்கிய விஞ்ஞானி யார்?

தெரியுமே!



விடைகள்: 2003. டாக்டர் மார்ட்டின் லூதர் கிங். 2004. பிரிட்டிஷ் ஸ்டாண்டர்டு டைம். (British Standard Time) 2005. மேற்கிந்தியத் தீவுகளில். 2006. நெப்டியூன்- கடலின் கடவுள் என்று. 2007. யு.எஸ்.எஸ். நாட்டிலஸ் (U. S. S. Nautilus). 2008. இபிஸ் (Ibis) என்று பெயர். 2009. ஸஸக்ஸ் மாகாணத்திலுள்ள ஹெர்ஸ்ட்மான்ஸக்ஸ் என்னுமிடத்தில் (Herstmonceux, Sussex). 2010. சரிவான பரப்பை - ஏற்றக் கோணத்தை. 2011. டிரினிட்ரோடலீன் (Trinitrotoluene) என்ற வார்த்தையின் சுருக்கம். 2012. ஃபாரன்ஹீட் கணக்குப்படி 212 டிகிரிகளில் நீர் கொதிக்கும். 2013. பரோ மீட்டர். 2014- கரியமில வாயு. 2015. எப்ஸம் ஸால்ட். (Epsom Salt.) 2016. இங்கிலாந்திலுள்ள தென்முனை (South End) என்னுமிடத்தில். 2017. கர்னல் தாமஸ் பிளட் என்பவர். 2018. வைகவுண்ட்ஸ் நான்ஸி ஆஸ்டார் என்பவர். 2019. விக்டோரியா மகாராணியை. 2020. மைனஸ் 2.5 சென்டி கிரேடிலிருந்து மைனஸ் 3 சென்டிகிரேட் வரை. 2021. பாய்ல் (Boyle) என்பவரின் சித்தாந்தம் இது.

'கோகுலத்'தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான்!


ராசுவும் வாசுவும்
—கடத்தல் கயவர்களைச் சிறைசெய்த சாதனை!
ராசுவும் வாசுவும் மாலைநேரத்தில் நடக்கிறார்கள். கண்டகாட்சி அவர்கள் பேச்சை நிறுத்தியது
"அதோ பாரு ராசு, திருடனில்லே அது கடத்தல்மன்னன் கண்ணாயிரம்."
"விரைந்து வாருங்க இன்ஸ்பெக்டர், ஓடி மடக்கிடுவோம் கடத்தல்காரங்களைப் பிடிச்சு சிறைபிடிப்போம்."
கடத்தல்காரங்க ஓடிப்பார்த்தாங்க, ஆனா வழுக்கிவிழுந்தாங்க. கால் தரைப்பிடிப்பில்லாம தடுமாறி உருண்டாங்க.
"அவங்க காலடியில் உருட்டிவிட்டேன் பாப்பின்ஸ் பாக்கெட்டுகளை! இப்போ பேக்கெட்டுகளைப் பிரிச்சிடுவோம், பங்கிட்டு சுவைத்திடுவோம்."


PARLE
POPPINS